
ஆரம்பம் 1969 பெப்ரவரி

அறிவோம்.. அறிவிப்போம்...

"நாய்கள் சண்டையாக மாறியுள்ள ஜனாதிபதித் தேர்தல்"







செப்டம்பர் - 2019


ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு



50/=



# அன்புடன் உங்களோடு ...




## செய்ய முடியாது ....

**உ**லகில் பல உயிரினங்கள் உயிர்வாழ்ந்தாலும், சிந்தனை எனும்போது மனிதன் தனக்கென ஒரு இடத்தைப் பிடிக்கிறான். சிந்திக்கத் தெரிந்தவன் மனதில் வித்தியாசப்படுகிறான்.

கவியரசர் கண்ணதாசன் சொல்வார்:
**"சிந்திக்கத் தெரிந்த மனமே...."** என்று.
சுகிசிவம் சொல்வார்,
**"மனசே மந்திரச் சாவி"** என்று.

ஆக, மனித மனதின் சிந்தனை வித்தியாசமானது. அழகான ரோஜாவில் ஆசைப்பட்டவன் பறிக்கும்போது கையில் முள் குத்தியதும், அழகான ரோஜாவுக்கு அருகில் முள் வைத்த கடவுள் முட்டாள் என்று பெயர் வைக்கிறான்.

ஆஹா... கடவுள்தான் கருணையுள்ளவர். இந்த முள்ளை நேசித்தவர் அருகில் ரோஜாவை சிரிக்க விட்டிருக்கிறார். அப்படி இல்லாவிட்டால் யாராவது இதை வளர்ப்பார்களா...?

செய்ய முடியாது என்று உன் மனது கட்டளை இடும் செயல்களை நீ செய்து காட்ட முயற்சி செய்திருக்கிறாயா...? கண்களைத் திறந்து வைத்துவிட்டு தூங்குவது முடியாதது. யானைகள் துள்ளிக் குதிக்க முடியாது. முதலைகள் அதன் நாக்கை வெளியே நீட்டி இரைகளைப் பற்ற முடியாது. தட்டான் பூச்சிகள் பறந்தாலும் சரி, நின்றாலும் சரி இதனால் இறக்கைகளை மடக்க முடியாது.

**முடியாது, இயலாது, சரிவராது, முயற்சி செய்யாதே**
என்றெல்லாம் மனது உனக்கு கட்டளை இடுவதையெல்லாம் முடியும், இயலும், சரிவரும் என்று மயற்சி செய்தால் வாழ்க்கை மாறும். நிலை உயரும். முயன்றுபார், உன்னாலும் எல்லாம் செய்ய முடியும்.

– ஆசிரியர் –



"பிள்ளாய்! என் அறிவுரையை மறவாதே;
என் கட்டளைகளை உன் இதயத்தில் இருத்திக்கொள்"

நீதிமொழி 3:1

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் - 1969 பெப்ரவரி

மலர் - 51 இதழ் - 08

செப்டம்பர் - 2019

ஆசிரியர் :

■ அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

கணினி வடிவமைப்பு

■ சுபாஜெனி சங்கர்

வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம், மட்டக்களப்பு மறைமாவட்டம்.

முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


| | |
|---|---|
| மரியன்னையின் பிறப்பு | 02 |
| கடுகுக் கதை | 04 |
| சிறை | 05 |
| பணம்தான் | 06 |
| உறவினர்களைத் தெரியுமா? | 07 |
| போதைக்கு எதிரான போராட்டம் | 09 |
| மனிதத்தை மதிப்போம் | 10 |
| இதோ உனக்கு செய்து காட்டுகிறேன் | 11 |
| மாணவர் பக்கம் | 12 |
| வேண்டுதல்கள் | 13 |
| மரணத்தைத் தேடி ஓடாதே | 14 |
| பல்லில்லாத பெரியவர் | 15 |
| காலம் கடக்கு முன் | 16 |
| என்னைக் கவர்ந்த ஆடலழகி | 16 |
| சுவையான சுருட்டு | 17 |
| கடுகு சிறிதானாலும் | 18 |
| வெற்றியாளர்கள் விபரங்கள் | 21 |
| இராயப்பு ஜோசப் ஆண்டகை | 22 |
| சுற்றுச் சூழலியம் | 24 |
| திருவிவிலியம் கற்போம் | 26 |
| வினாவிடைப் போட்டி | 27 |
| லீசிங்கால் விளைந்த வில்லங்கம் | 28 |



ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)



SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com


விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 960/=
(தபாற் செலவு உட்பட)

# மரியன்னையின் பிறப்புப் பெருவிழா



(செப்டம்பர் 08)

- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
**மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்**

புனித மரியன்னையின் பிறப்புப்பெருவிழா 8ஆம் நூற்றாண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகின்றது. செப்டம்பர் 8ஆம் திகதி மரியன்னையின் பிறப்பு விழாவைக் கொண்டாடுவது, 9 மாதங்களுக்கு முன்பான டிசம்பர் 8ஆம் திகதியை மரியன்னையின் அமல உற்பவத் (The Immaculate Conception) திருவிழாவை முடிவு செய்வதற்குப் பேருதவியாக இருந்தது.

புனித கன்னி மரியாவின் பிறப்புப் பெருவிழா பிறப்பு நிலைப் பாவமின்றி (சென்மப் பாவம்) கர்ப்பமாய் நம் அன்னை மரியா உற்பவித்த தினமாக டிசம்பர் 8ஐ தாய்த் திருச்சபை கொண்டாடுகிறது. அதன்படியே செப்டம்பர் 8ஆம் நாள் பிறப்புப் பெருவிழாவும் நம் அன்னை கன்னி மரியாவுக்குக் கொண்டாடப்படுகிறது. இது பற்றி கி.பி. 2ஆம் நூற்றாண்டில் திருத்தூதர் யாக்கோபு பெயரில் வெளியான "Proto Evangelium" நூலில் 5:2இல் வெளியிடப்பட்டுள்ளது. அதில்தான் கன்னி மரியாவின் தாய் அன்னா என்றும் தந்தை ஜோக்கீம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்னை மரியா எருசலேமில் பிறந்தார் என்பது மரபு வழிச் செய்தியாகும். அங்குள்ள புனித அன்னாள் ஆலயத்தில் நமது அன்னை பிறந்த இடமென்று ஓர் இடத்தை நாம் இன்றும் காணலாம். உரோமன் பொதுக் காலண்டரிலும், ஆங்கிலிக்கன் காலண்டரிலும் செப்டம்பர் 8ஆம் நாள் அன்னை மரியாவின் பிறந்த நாள் என்பது குறிப்பிடப்பட்டு கொண்டாடப்படுகின்றது. கீழைத் திருச்சபையும் இதே திகதியில்தான் இவ்விழாவைக் கொண்டாடுகிறது. பைசாந்தியன் ரீதியினரும் கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் இவ்விழாவைக் கொண்டாடி வருகின்றனர். சீரியன் ரீதியினரும் செப்டம்பர் 8இல்தான் இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர். வரலாற்றுப் புகழும் வான் புகழும் கொண்ட நம் அன்னை மரியா அதே செப்டம்பர் 8ஆம் நாளில், இலங்கையிலிருந்து இந்தியா சென்று கொண்டிருந்த போர்த்துக்கீசிய மாலுமிகளுடைய கப்பலை கடுமையான புயலுக்கு நடுவில் வேளாங்கண்ணியில் கரை சேர்ந்ததாகக் கூறுகிறது.

விவிலியம் மரியாவின் பிறப்பு பற்றிய குறிப்புக்களை வழங்கவில்லை என்றாலும், அவரது பிறப்பு பற்றி தொடக்கநூல் வழங்கும் மண்ணுலகிற்கான முதல் நற்செய்தி கடவுளின் மீட்புத் திட்டத்தில் மரியா இடம்பெற்றிருந்ததை உறுதி செய்கிறது. "உனக்கும், பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப் படுத்தும்". இந்த விவிலிய மேற்கோளில் வரும் பெண் (மரியா), அவர் வித்து (இயேசு - இறை மகன்). இறைவனின் மீட்புத் திட்டத்திற்காக கடவுளின் சிறப்பான பிரசன்னம் மரியாவின் வாழ்வின் தொடக்கத்திலிருந்து காணப்பட்டதையும் இது உறுதி செய்கிறது.



கீழைத் திருச்சபையின் சிறந்த நூலான புனித யாக்கோபு நற்செய்தியின்படி மரியாவின் பிறப்பு, சுவக்கீன் - அன்னாள் இவர்களின் தாம்பத்திய உறவினாலல்லாமல் புதுமையாக நிகழ்ந்த ஒன்றாகும். இதை வேறு வார்த்தைகளில் அந்தியோக்கு இஞ்ஞாசியார், இப்போலிட்டஸ் போன்

றோர் "மரியா மீட்கப்பட்டவர்தான் என்றாலும், அவர் மாண்புமிக்க மன்னரின் மனுவுருவாத லுக்காகத் தந்தை கடவுளால் காக்கப்பட்டவர்" என்கின்றனர்.

புனித அகுஸ்தினார் மரியாவின் பிறப்பை இயேசுவின் மீட்புச் செயலுடன் தொடர்புபடுத்து கின்றார். "மரியாவின் பிறப்பு ஒளியில் மண்ண கம் மகிழ்ந்து ஒளிரட்டும். ஏனெனில் பள்ளத்தாக் கின் விலைமதிப்பு மிக்க லில்லிமலர் மலர்ந்து பூத்துக் குலுங்கியது இந்தப் பூமியின் மலராகிய மரியாவிலிருந்துதான்" என்கிறார். மனித குலத் தின் முதல் பெற்றோரிடமிருந்து இயற்கை சுவீகரித் துக்கொண்ட அனைத்து சாபங்களும் மரியாவின் பிறப்பில் முற்றிலும் மாறிப் போனது என்கிறார்.

கத்தோலிக்கத் திருச்சபையின் வழிபாட்டு கால அட்டவணையில் இரண்டு பிறப்பு விழாக்கள் மட்டுமே கொண்டாடப்படுகின்றன. ஒன்று, திருமுழுக்கு யோவானின் பிறப்பு (ஜுன் 24), இரண்டு மரியாவின் பிறப்பு (செப் 8). மரியா திருமுழுக்கு யோவான் பிறப்பதற்கு முன்பே அர்ச்சிக்கப்பட்டவர். "மரியாவின் வாழ்த்தை எலிசபேத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை (திருமுழுக்கு யோவான்) மகிழ்ச்சியால் துள்ளிற்று" (லூக் 1:41). மரியாவின் பிறப்பு ஒரு மாபெரும் புதுமையானது. ஏனெனில் மரியா அமல உற்பவியாகப் பிறந்து, தன் ஒரே பேறான மகனின் தாயாக இருக்க கடவுளால் தேர்ந்தெடுக் கப்பட்டவர்.

பிறப்பு விழா எப்போதும் மகிழ்ச்சியின் விழா. மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டிய செய்தியான இயேசுவின் பிறப்புக்கு அடுத்த படியாக மண்ணக மக்களுக்கு மகிழ்ச்சியூட்டக்கூடிய பிறப்பு மரியாவின் பிறப்பாகும். மரியாவின் பிறப்பு விழா மண்ணவர் மனங்களிலும், உலகிலும் மகிழ்ச்சியையும், அமைதியையும் விதைத்து விருட்சமாக்கும் விழா என்பதே மரியன்னையின் பக்தர்களிடம் காணப்படும் இறை நம்பிக்கையாகும்.

கத்தோலிக்கர்கள் அன்னை மரியாவை ஆரா திப்பதில்லை. தந்தை, மகன், தூய ஆவியா கிய மூவொரு கடவுளை மட்டுமே ஆராதிக்கின் றனர். அப்படி மூவொரு தேவனைத் தவிர்த்து வேறு எவரையும் யார் ஆராதித்தாலும் அவர்கள் கத்தோலிக்கர்கள் அல்ல; மரியா இறைவனின் தாய். பெண்களுக்குள் பேறுபெற்றவர். மனிதருக்குள் மாணிக்கம் என்று அன்னை மரியா மீது அளவு கடந்த அன்பும், மரியாதை கலந்த உயர்ந்த வணக்கமும் கொண்டவர்கள் கத்தோலிக்கர்கள். இரண்டாம் வத்திக்கான் சங்கம், "திருச்சபை ஏடு", எண் 55-இல், விவிலியம் நிறைவாழ்வுத் திட்டத்தில் மீட்பரின் தாய்க்குரிய பணியைத் தெளிவாக வெளிக்காட்டுகிறது.

உலகில் கிறிஸ்துவின் வருகை படிப்படியாகத் தயார் செய்யப்பட்டு வந்தது என்றும் மீட்பு வரலாற்றைப் பழைய ஏற்பாட்டு நூல்கள் விவரிக் கின்றன. தொன்மை வாய்ந்த இந்நூல்கள் திருச்சபையில் வாசிக்கப்பெற்று பிற்காலத்தில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளின் ஒளியில் உணரப்பெறும் போது மீட்பரின் தாயான ஒரு பெண்ணின் உருவைப் படிப்படியாகத் தெளிவாகக் காட்டுகின்றன.

முதல் பெற்றொரின் பாவத்திற்குப் பின், அலகையின் மீது பெறப்போகும் வெற்றியைப் பற்றிய வாக்குறுதியில் மரியா இறைவாக்காக முன்னுரு வகிக்கப் பெற்றதை (தொ.நூல் 3:15) பிற்கால வெளிப்பாட்டின் ஒளியில் நம்மால் தெளிவாகக் காணமுடிகிறது. "கடவுள் நம்முடன் இருக்கிறார்" என்று பெயர் பெறப்போகும் மகனைக் கருத்தாங்கிப் பெற்றெடுப்பார் என்று கூறப்பெற்ற கன்னியும் மரியாவே ஆகும் (எசா 7:14, மீக் 5:2-3, மத் 1:22-23).

சீயோனின் மாண்புமிக்க மகளான அவரோடு, வாக்குறுதியை எதிர்பார்த்திருந்த நீண்ட காலம் முடிந்தது. மரியாவில் புதிய திட்டம் உருவானது. இந்தப் புதிய திட்டத்தில், மனிதரைத் தம் உடலில் நிகழ்ந்த மறை நிகழ்ச்சிகள் வழியாக மீட்க, இறைமகன் மரியாவிடமிருந்தே மனித இல்பை எடுத்துக் கொண்டார் என்று வாசிக்கிறோம்.

மரியா இறைவன் வாழும் ஆலயம். அவர் ஓர் உயிருள்ள உடன்படிக்கைப் பேழை. மரியாவின் பிறப்பு மாபெரும் மகிழ்ச்சியான ஒன்று. ஏனெனில், அவரது பிறந்த நாளில்தான் கடவுள் தாம் வாழும் ஆலயத்தைக் கட்டத்தொடங்கினார். அவரது பிறந்த நாள்தான் படைத்த கடவுளின் விரும்பத்தக்க

→

கடுக்கதை - 101

# திருந்தாதவர்கள்!



- பற்றி



அன்ரன் தன் நண்பர்களுடன் உணவுவேளை யின்போது உரையாடிக்கொண்டிருந்தார்.

"இண்டைய பேப்பரப் பாத்தீங்களா ..... அந்தக் கட்சியின் வேட்பாளரின் பெயர் வந்திருக்கு ...." என்று அன்ரன் சொன்னார்.

"ஓமோம் பாத்தன்..... பொல்லாத பிரசையப்பா அந்தாள்..... நான் வெள்ளவத்தையில இருக்கக் குள்ள நடுச்சாமம் பஸ்ஸ கொண்டுவந்து, உடுத்த சாரத்துடன் ஏத்திக்கொண்டு போய் வவுனியா இறக்கிவிட்டவங்க.... பல்லும் தீட்டல்ல .... முகமும் கழுவல்ல .... கக்கூசும் பாவிக்கல ..... வவுனியாவும் தெரியாது ..... சேர்ட்டும் போடல்ல .... கையில காசும் இருக்கல்ல .... உள் காற்சட்டையும் போடல ..... என்ன கஷ்டப்படுத்திப்போட்டாங்க .... நாங்கெண்டாலும் பரவாயில்ல, பொண்புரசுகள் பட்ட அவதி ....." என்று பெருமூச்சு விட்டார் தணிகாசலம். ஒரு கணம் அந்தக் காலத்திற்கே சென்று வந்து விட்டார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த இஸ்மாயில், "அப்ப உங்கள பஸ்ஸில ஏத்தினாங்க .... இனி வந்தா நமக்கு மேலதான் பஸ்ஸ ஏத்துவானுக ....." ஆழ்ந்த யோசனையுடன்தான் சொன்னார்.

'முந்தி இஸ்மாயில் இப்புடிக் கதைக்கமாட்டார். ஏப்ரிலுக்குப் பிறகு நடந்த கைதுகளத் தொடர்ந்து தான் இப்பிடி மாறிப் போய்ட்டார் ....' என்று அன்ரன் மனதுக்குள் நினைத்துக் கொண் டார்.

அந்தாளுடன் சேர்ந்து நம்மடவன்களும் போட்டோவுக்கு போஸ் குடுக்கிறாங்க .... திருந்தவே மாட்டாங்க ...." என்றார் தணி. ■

→ உறைவிடமாக ஒரு மனித உயிர் (மரியா) மாறிய மாபெரும் பெருநாள்! மண்ணக மாந்தர் யாவரும் மரியன்னையின் பிறப்பை மகிழ்ந்து கொண்டாடக் காரணம், மரியா வழியாக மகிழ்ச்சி, நீதி, நம்பிக்கை மற்றும் மீட்பின் ஒளி பிறக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

ஒரு பெண் வழியாக வந்த 'வீழ்ச்சி', மரியா என்னும் இன்னொரு பெண்ணாகிய இறைவனின் தாய் வழியாக 'மீட்பு' என்ற வெற்றியாக மாறியது. ■




- சுமைகளை நினைத்து கலங்கி,
உடைந்து போக வேண்டாம்.
- இறைவன் நம் வாழ்வின் சுமைகளில்
தோள் கொடுக்க காத்திருக்கிறார்.
- ஒருபுறம் மழை - இன்னொருபுறம்
வரட்சி, துன்பங்கள், அரசியல்
குழப்பங்கள். நம்புவதற்கு யாரும்
இல்லை என்ற நிலை
யில் வாழ்ந்தாலும் இறைவன் எங்களை
மறக்கவில்லை என்பதை
நாம் மறக்கக்கூடாது.



# சிறை

● பைந்தமிழ்க்குமரன் டேவிட்

காதுக்குள் அடைப்பு, தலைக்கு குளிர் ஏறாத தொப்பி. கம்பளியாலான நீளக்கை சட்டை, ரவுசர். கால்களில் சொக்ஸ் அத்தனையையும் தாண்டி உடல் சில்லிட்டு நின்றது. சூழலெங்கும் பனிப்படலம் படர்ந்திருக்க பனித்திவலைகள் கொட்டிக்கொண்டிருக்கும் அதிகாலைப் பொழுது.

உறவுகளைச் சந்தித்து, வாய்விட்டுப் பேசிச் சிரித்துக் கொள்ளக்கூட நேரமில்லாமல் திணிக்கப்பட்ட வாழ்வியலுக்குள் தொலைந்துபோன வாழ்க்கையை வாழ்ந்து வெறுத்துப் போய்விட்டது. எனது மகனது குடும்பத்துடன் கடந்த ஒன்பது வருடங்களாக வாழும் எனது எண்ணங்கள், தாய் நாட்டையும் தாய் மண்ணையும் நினைத்து ஏங்கிக் கிடக்கின்றது. மனதோ தவித்துப் போகிறது.

மகனின் அழைப்பு வரும் இன்னும் ஒரு மணி நேரத்தில், முடிவைச் சொல்லி விடுவான். உள்ளம் சிறகடித்துப் பறந்து கடல்களையும், மலைகளையும், நாடுகளையும் தாண்டி இலங்கைத் தாயின் மடியில் லயிக்கிறது. என் மனைவி இறந்தபோது அவசரமாக வந்த மகன் தனிய கிடந்து தவிக்க வேண்டாம், அங்கு பேரப் பிள்ளைகள் பார்க்க ஆசைப்படுகிறார்கள் என்று என்னையும் கையோட கூட்டி வந்து சேர்த்தான். இந்த ஒன்பது வருட வாழ்க்கை ஏராளமான ஏமாற்றங்களைத் தந்துவிட்டது. வாழ்வதற்காகப் போராடும் மனிதர்கள், அந்நியமாகிப்போன உறவுகள் மெல்லியதோர் நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கும் குடும்ப வாழ்க்கை சலித்துப் போனது.

ஆற்றங்கரை வளவு கருவண்டுகள் போல பழுத்துக் கிடக்கும் நாவல் மரம், வெண்டி, கத்தரி, தக்காளி என்று நிறைந்து கிடக்கும் தோட்டம், வேலியெங்கும் பீர்க்கு, பாகல் கொடிகள், பந்தலில் புடோல், வடக்கே வள்ளிக்கிழங்கு, கருணைக்கிழங்கு. வீட்டின் பின்புறம் மரவள்ளி, வற்றாளை. தொழுவத்தில் பால் மாடுகள். 'ஓ..... வள்ளி மாடு நல்ல பால்காரி. குழப்பம் செய்வதில்லை. பின்கால்களை கட்டாமல் பால் கறக்கலாம். சீதா என்றால் தட்டித் தடவி முதுகு சொறிந்து இளஞ்சூடான நீரால் மடி கழுவி பால் கறக்கவேணும். அதுவும் நான் மட்டுந் தான் பால் கறக்கலாம். எனது தலையை நக்கியபடி பால் தரும் சீதா.'

கண்கள் மணிக்கட்டில் நிலைகுத்தியது. இன்னும் மகனின் அழைப்பு வரவில்லை. மகன் மட்டும் சம்மதித்து விட்டால் பேரப்பிள்ளைகளுடன் மகன், மருமகளும் வர தாய் நாட்டில் கலந்துவிடலாம். கடந்த பல வருடங்களாக மகனோடு பேசிப் பேசி கல்லைக்கரைப்பது போல முயற்சி செய்தாகி விட்டது. வீடு வாசல் எப்படியிருக்குமோ? வளவு காடு பிடித்து புற்களும், புதர்களும் மண்டிக் கிடக்குமோ, டெங்கு பரவுவதால் வளவு வாய்க்கால் சுத்தப்படுத்தி யாரையாவது குடிவைக்கும்படி விதானை சத்தம் போட்டதாக யோகராசா போனில கதைச்சவன். காசு கொஞ்சம் அனுப்பி துப்புரவாக்கி, பாத்துக்கொள்ளடாப்பா எண்டு சொல்லி விட்டன். என்ன செய்திருக்கிறானோ தெரியாது. காசை தானெடுத்துப்போட்டு வளவு வாசல அழியவிட்டாலும் விட்டிருப்பான். 'உடையவன் இல்லாட்டி ஒரு முழம் கொட்டான்'.

இன்னமும் போன் வரல்ல. மனம் தவிலடிக்கிறது.

சில்லென்று வீசும் காற்றில் மாமர நிழலில் கற்பன்பாயை விரித்துப் போட்டு கால் நீட்டிப் படுத்தால் கிடைக்கும் சுகம். அந்த சுகமான நித்திரை இஞ்சை வருமா? அந்தக் கிராமத்து வாழ்க்கை பற்றி மகனுடன் பேசும்போது ஆவலாகக் கேட்பான். சொந்தங்கள் கூடிக்கலந்து வாழ்ந்த அந்தக் கூட்டு வாழ்க்கையின் வசந்தங்களை நான் கூறும்போது கேட்டுப் பிரமித்துப் போவான். "நாம் ஊருக்கே போயிருவம் மகன்" என்பேன். அமைதியாகி விடுவான். "என்னை மட்டுமாவது அனுப்பி வை மகன். நான் மட்டுமாவது போய் வளவு வாய்க்கால துப்புரவாக்கி அங்க சீவிக்கிறன்" எண்டு கேட்டுப் பாத்தன். "உங்களுக்கென்ன இளந்தாரியெண்ட நினைப்போ? இப்ப எழுபத்தாறு வயசாகுது. நடக்கவும் முடியாம கஸ்டப்படுறியள். தனிய உங்கள அனுப்ப ஏலாதப்பா" ஒரேடியாக மறுத்துவிட்டான். 'இஞ்ச மட்டுமென்ன தனியாத்தானே கிடக்கிறன். ஒரு பேச்சுத் துணைக்குக் கூட ஆளில்ல. அங்க இருந்தா சுத்து வட்டாரமும் சொந்தங்கள் எப்படி சொல்லமுடியும். இயலாமையால் குமைந்து கூனிக் குறுகிப்போவேன். எனது பல வருட முயற்சியின் விளைவு தனது அலுவலக மேலதிகாரியிடம் பேசி இண்டைக்கு முடிவு சொல்வதாகக் கூறிச் சென்றவன், அதுதான் மனம் இந்தப்பாடு படுகின்றது.

போண் கிணுகிணுத்தது. ம்...ம்... மகன்தான்.... "த் ... த... த... தம்பி என்ன ஊருக்குப் போறதுதானே....? குடும்பத்தோட அங்கேயே சீவிக்கலாம். பிள்ளைகள படிப்பிக்கலாம். மூத்தவளுக்கு நல்ல இடத்தில மாப்பிள...." "அப்பா.... இஞ்ச நினைச்ச உடனே வேலைய ரிசைன் பண்ணஏலாது எண்டு சொல்லிப்போட்டாங்கள். அதோட பிள்ளைகளுக்கு அங்க சுவாத்தியம் ஒத்துப் போகாதாம் எண்டு உங்கட மருமகள் சொல்லுறா. இங்கத்தய கல்ச்சருல பழக்கப்பட்டதுகள். நம்மட விருப்பத்தப் பாத்து அதுகளின்ர எதிர்காலத்த பாழாக்கக்கூடாதெண்டு சொல்லுறா. ரெண்டு மூணு வருசம் போகட்டும் யோசிக்க லாமப்பா...."

தொலைபேசி ஓய்ந்தது.

ஒரு வாரத்திற்கு முன்னர் மருமகள் ஒரு படிவத்தை மகனிடம் காட்டி வருத்தம்வாதையோட வயசு போனதுகள் இருக்கிற பெமிலிகள் இந்தப்போம நிரப்பி பதிஞ்சி வைக்க வேணுமாம். திடீரெண்டு ஏதாவது நடந்தா அரசாங்கமே அடக்கம் செய்யுமாம். இஞ்ச நடைமுறை இதுதான், என்று கொடுத்திருந்த அந்தப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு ஒப்படைக்கத் தயாராக அதோ தெரிகிறது.

■■■



# பணம்தான்

● ரஜனி ஈஸ்வரன்

அரசன் ஆண்டியாவதும் ஆண்டி அரசனாவதும்
அழுவோர் சிரிப்பதும் சிரிப்போர் அழுவதும்
வந்த நிலை எதனால் - பணம்தான்
குருடனைப் போல் வரவுக்குமேல் செலவு
செய்தாலும்
திருடன் திருந்தாமல் வாழ்தலும்
வந்த நிலை எதனால் - பணம்தான்
உன்னிடம் இன்று நிறைய இருப்பதும்
என்னிடம் நாளை வருவதும்
என்னவென்று பார் அது - பணம்தான்
கருணை இரக்கம் நேர்மை உள்ளோரிடமும்
களவு கோபம் பொய் ஆசை கொண்டோரிடமும்
இருப்பதும் இல்லாததும் - பணம்தான்
அள்ளிக் கொடுக்காது பதுக்குவோரிடம் சேர்வதும்
எது என்று பார் - பணம்தான்
பிறப்போ இறப்போ வியாதியோ விபத்தோ
கல்வியோ கல்யாணமோ உணவோ உடையோ
எதுவானாலும் எதிர்கொள்ளத் தேவை -
பணம்தான்
நம்மிடம் பணம் குணம் அன்பு பண்பு பக்தி
இருந்தும்
நான் நீ நாம் உயர்வாய் தாழ்வாய் வாழவும்
நம் இறைவனுக்கு நன்றியாய் காணிக்கை
போடவும்
நாம் மனிதனாக பிறந்ததால் உயிருடம் வாழவும்
நம் கையில் இருக்கவேண்டியதும் - பணம்தான்
நாம் கைப்பற்ற நினைப்பதும் - பணம்தான்.



# உறவினர்களைத் தெரியுமா உங்கள் குழந்தைகளுக்கு!



● ஜே. எச். இரத்தினராஜா

"சித்தி அவன் என் முடியைப் பிடிச்சு இழுக்கிறான்..."

"அவதான் முதல்ல என் சட்டையைப் பிடிச்சு இழுத்தா..."

"இரண்டு பேரும் கொஞ்ச நேரம் சும்மா இருக்க மாட்டீங்களா? உங்க பாட்டி பலகாரம் செஞ்சுட்டு இருக்காங்க. இரண்டு பேரும் சமையல் கட்டுக்குப் போங்க..."

சில பல ஆண்டுகளுக்கு முன் இப்படியான பேச்சுக் களை நம் குடும்பங்களில் கேட்டிருக்கலாம்.

"மம்மி ஐசிங் கேக் வேணும்....."

"ம்ம்ம்... ஷாப்பிங் போகும்போது வாங்கலாம்"

"டாடி ..... ஐ பேட் வேணும்"

"கொஞ்ச நேரம் டிஸ்டர்ப் பண்ணாம மொபைல்ல கேம்ஸ் ஆடு செல்லம்"

இது நிகழ்காலத்தில் நம் வீடுகளில் கேட்கும் உரை யாடல்கள்.

அம்மா – அப்பா, அண்ணன் – தம்பி, அக்கா – தங்கை, தாத்தா – பாட்டி, பெரியப்பா – பெரியம்மா, சித்தப்பா – சித்தி, மாமா – மாமி, அண்ணன் - அண்ணி, மைத்துனர் - மைத்துனி, பேரன் - பேத்தி, கணவன் - மனைவி, மகன் - மகள், மாமனார் - மாமியார், இதெல்லாம் குடும்ப உறவுகள் என்பதை நம் குழந்தைகள் பாடப் புத்தகத்தில் படித்திருக்கலாம் அல்லது பெரியவர்கள் பேசும்போது கவனித்திருக்கலாம். கூட்டுக் குடும்பங்கள் தழைத்திருந்த காலத்தில் அத்தனை உறவுகளுமே ஒரே வீட்டில் இருந்ததைப் பார்த்திருக்க முடியும்.

கூட்டுக் குடும்பங்கள் தனிக் குடும்பங் களாக உடைந்த பிறகு ஒரு குடும்பத்தில் அப்பா அம்மாவோடு இரு குழந்தைகள் என்று சுருங்கியது. இப்போது அதுவும் குறைந்து ஒரு குழந்தை மட்டுமே உள்ள வீடுகள் அதிகரித்து வருகின்றன.

அப்பா, அம்மா, மகன் அல்லது மகள் என்று அமையும் நியூகிளியர் குடும்பங்கள் அதிகரித்து வருவது ஒரு பக்கம் இருக்க, வருந்தத்தக்க வகையில் குழந்தையுடன் தனித்து வாழும் தாய் அல்லது தந்தை என சிங்கிள் பேரண்ட் குடும்பங்களும் பெருகி வருகின்றன.

இப்படி உறவுகள் அனைத்தும் சிதறி வாழும் இன்றைய கால கட்டத்தில் உறவு முறைகளின் பெயர்களை குழந்தைகள் பெயரளவில் தெரிந்து வைத்திருப்பதே ஆச்சரியம்தான். குடும்பம், குடும்பமாக ஸ்டுடியோவுக்குச் சென்று குடும்பப் புகைப் படங்கள் எடுத்து அதைச் சுவரில் மாட்டி வைத்து இது தாத்தா, இது கொள்ளுப்பாட்டி, இது பெரியப்பா என்று சொல்லி வளர்த்த காலம், இன்று செல்போன் செல்ஃபிகளில்

கரைந்து கொண்டிருக்கிறது.

பாட்டி வீட்டுக்குப்போய் ஆற்றில் குளிப்பது, ஆல மரத்தில் விழுது கட்டி ஊஞ்சல் ஆடுவது, பெரியம்மா வீட்டு முற்றத்தில் பம்பரம் விளையாடுவது, மாமாவோடு சென்று மீன் பிடிப்பது, சித்தியோடு திருவிழா பார்ப்பது, அண்ணி வீட்டில் கைமுறுக்கு சாப்பிடுவது என உறவுகளுடனான சுகானுபவங்கள் இல்லாமல் பிணைப்பற்று வாழ்கிறார்கள் இன்றைய குழந்தைகள்.

நம் தலைமுறையில் அங்கொன்றும், இங்கொன்றுமாக இருக்கும் உறவுகளைப்பற்றி பெயரளவில் கூட தெரியாத அளவுக்கு குழந்தைகளை வளர்த்துக்கொண்டிருப்பது ஆரோக்கியமானதா? இப்படியே போனால் நாளை நமது பேரக்குழந்தைகளுக்கு நாம் யாரென்பதுகூடத் தெரியாத நிலை வரக்கூடும். குடும்ப உறவுகளை நம் குழந்தைகள் எந்த அளவுக்கு அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை முதலில் நாம் தெரிந்துகொள்வது அவசியமானதுதானே.

உறவுகள் என்பதே விவாதத்துக்கு உரிய விஷயமாகிவிட்ட நிலையில் இன்றைய குழந்தை வளர்ப்பும், உறவுகளைவிட்டு தனித்திருப்பதையே பிரதானப்படுத்துகிறது. உறவினருக்கும் குழந்தைகளுக்குமான உறவு எப்படி இருக்க வேண்டும்? உறவுகள் பலம் இழந்ததன் காரணம் என்ன? இதற்கான தீர்வு என்ன? இவற்றைப்பற்றி இந்திய மனநல மருத்துவரான திருநாவுக்கரசு என்பவர் தெரிவித்த விடயம்.

"உறவுகள் தேவை என்றால் அதற்கு குடும்பம் இருக்கவேண்டும். அண்ணன் - தம்பி, அக்கா - தங்கை என குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகும்போதுதான் அவர்களின் வாரிசுகளுக்கு மாமா, மாமி, பெரியப்பா பெரியம்மா, சித்தப்பா சித்தி உள்ளிட்ட உறவுகள் கிடைக்க முடியும். தனியொரு குழந்தையாக இருக்கும்போது உறவுகள் எப்படி விரியக்கூடும்? திருமணத்தையே ஏன், எதற்கு? என்று கேள்விக்கு உள்ளாக்கும் சமூக அமைப்பு நம்மை நெருங்கிக்கொண்டிருக்கும் வேளையில் குடும்பங்களின் உறவுகளைப் பெருக்குவது சற்றுக் கடினம்தான்.

தனிக்குடித்தனம், பொருளாதாரச் சூழல், ஒரே குழந்தை, சமூக மாற்றம், தொழில்நுட்ப வளர்ச்சி இது போன்ற காரணங்களாலேயே இன்று உறவுகள் சுருங்கிக்கொண்டிருக்கின்றன. இதில் மிக முக்கிய பங்கு தொழில்நுட்ப வளர்ச்சி (Technology) க்கு இருக்கிறது. என்னதான் தொழில்நுட்ப வளர்ச்சி மூலமாக எங்கோ இருக்கும் உறவுடன் பேசமுடியுமென்றாலும் அதன் அசுர வளர்ச்சி நாம் உறவினர்களுக்கு ஒதுக்க வேண்டிய நேரத்தை அபகரித்துக்கொள்கிறது என்பது உண்மை.

மனித உணர்வுகளை மனிதர்களிடம் பகிர முடியுமே தவிர இயந்திரத்திடம் பகிர்ந்துகொள்ள முடியாது. நம் முன்னோர் வாழ்ந்த வாழ்க்கையையும், அவர்களின் அனுபவத்தையும் அவர்களே சொல்லிக்கேட்டு அதைப் பின்தொடர்ந்து வாழ்கிற வாய்ப்பையும் இன்றைய தலைமுறையினர் இழந்து வருகிறார்கள்.

இதற்கான தீர்வுதான் என்ன?

"தனி மனிதனாகவே வாழ்ந்திடலாம் என்கிற எண்ணம் துறந்து உறவுகளைப் பேணுவதில் கவனம் கொள்ள வேண்டும்."

உணவு, உடை, உறைவிடம், தூக்கம் போலவே உறவுகளுக்கு முக்கியத்துவம் தரும்போதுதான் மனிதாபிமானம் நிறைந்த சமூகம் உயிர்ப்புடன் இருக்கும்.


அடிப்படையில் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளலாம்.

பொருளாதாரத்தை உயர்த்துவதில் காட்டும் முனைப்பைவிட குழந்தை வளர்ப்பில் கவனம் செலுத்துவது அவசியம்.

குழந்தைகளுக்கு உறவினர்களிடம் பழகும் வாய்ப்பை தொலைபேசியோடு நிறுத்தி விடாமல் நேரிலும் வாய்க்கச் செய்யவேண்டும்

இப்படி குடும்பம் என்கிற மரம் தழைக்கும்போதுதான் உறவுகள் கிளைகளாகச் செழித்திருக்கும் என்று தெரிவித்தார் மனநல மருத்துவர்.

நாம் எந்தளவுக்கு குழந்தைகள், உறவுகளுடன் உறவாட முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.... சிந்தித்துப் பார்ப்போம். ■




# போதைக்கு

## எதிரான போராட்டம் வேண்டும்

செ. அன்புராசா அடிகள்

அமைதித் தென்றல், முல்லைத்தீவு, அதிர்வுகள் – 02

**படைத்தவனைப் பார்க்கப் பங்குத் தந்தைக்கே பயம்!**

மதுபானக் கடையொன்றில் இருவர் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வழியே சென்ற பங்குத்தந்தை அவர்கள் இருவரும் குடிப்பதைப் பார்த்துவிடுகிறார். இதனை அவதானித்த அவ்விருவரில் ஒருவன், "டேய், நாம குடிக்கிறத பங்குப் 'பாதர்' கண்டுட்டார்!" என மிகுந்த பயத்துடனும், கவலையுடனும் சொல்கிறான்.

மற்றையவன் சர்வசாதாரணமாக,

"அதுக்கே(ன்) பயப்பர்றா (பயப்படுகிறாய்)! நாம குடிக்கிறதைக் கடவுளும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்!" என்கிறான். அதற்கு முன்னையவன்,

"கடவுள் பார்க்கிறதைப் பற்றிக் கவலை இல்லடா! நாம குடிக்கிறதக் கடவுள், நம்ம மனிசிமாரிட்ட போய்ச் சொல்லிக்கொண்டா இருக்கப்போறார்!" என மிகப் பரிதாபத் தோடு கூறினானாம்.

கண்ணை மூடுவதற்கான ஒத்திகை!

"சாப்பிடும்போது தரையைப் பார்த்துச் சாப்பி டுகிறோம், பூமித் தாய்க்கு நன்றி சொல்ல. தண்ணீர் அருந்தும்போது வானத்தைப் பார்த்து அண்ணாந்து அருந்துகிறோம், மேகத்திற்கு நன்றி சொல்ல. நீங்க சரக்கு அடிக்கும்போது கண்ணு ரெண்டையும் இறுக்கி மூடிக் கொண்டு குடிக்கிறீங்க, ஏன்னா சரக்கு சொல்லுது, "என்னாலதான் நீங்க ரெண்டு கண்ணையும் ஒரேயடியா மூடப்போறீங்க!" என யாரோ ஒருவர் முகநூலில் பதிவு செய்த வாசகம் இது. மனதில் ஏதோ ஒரு வகையில் இடம்பிடித்து விட்டது. ●

## வினா விடைப் போட்டி - இல 16

### சரியான விடைகள்

1. டாக்டர் A.J.P. அப்துல் கலாம்
2. கலா 3:13
3. 4: நான்கு மாதங்களையும் ஒன்றிணைத்து ஐக்கிய இலங்கைக்குள் சமாதானத்தைக் கட்டி எழுப்புவதே திருச்சபையின் பாரிய பொறுப்பு.
4. இதில் ஆபிரிக்க நாடுகளிலிருந்து கறுப்பர்கள், கம்புகளினால், அமைக்கப்பட்ட கூடுகளில் அடைக் கப்பட்டு கப்பல்களில் ஏற்றப்பட்டு, கொண்டு செல்லப்பட்ட சம்பவம். அதன்பின்பு, இரண்டு, மூன்று பரம்பரைகளின் தொடராகக் காட்சிப்படுத் தப்பட்டன.
5. 1798ம் ஆண்டுகளில்
6. மந்தாரப் பூ
7. பாவித்த பிளாஸ்டிக் போத்தல்கள்
8. இவான், மரிஜா, இவாங்கா, மிர்ஜானா, ஜாக்கோவ், விக்கா
9. கவிஞர் கண்ணதாசன்
10. "உலகச் சிரிப்புத் தினம்" (World Laughter day)

*சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:*

- அ. கிறிஸ்ரினா,
  இல. 32, எல்லை வீதி,
  இருதயபுரம் மேற்கு.
- S. திவ்வியமலர்,
  5ம் குறுக்கு,
  திருப்பெருந்துறை.
- J. சாளினி,
  இல. 10/2, 3ம் குறுக்குத் தெரு,
  மட்டக்களப்பு.

# மனிதத்தை மதிப்போம்



- அருட்பணி N.C. அருள்வரதன்

துயர் கண்டும் காணாமல் செல்வது
மனித நேயத்தை மாசுபடுத்துமே
மனித நேயத்தை மறவாது நாங்கள்
மனிதரை மதித்து வாழ்வதே பெருமையாகும்.

வறுமைகளும் துயர்களெங்கும்
சிதறியவை பெருகிடவே
வெறுமைகளாய் எங்கும் வாடி நிற்க அதற்கு
நம்மால் முடிந்ததை நாம் கொடுக்க வேண்டும்.

துன்புறுவோர் துயர்களைக் காணும்போது
நம் உள்ளங்கள் அவர்களின் துயருணர்ந்தால்
நமக்குள் மனிதங்கள் மறையவில்லை
துன்பத்தில் உதவும்போது மகிழ்வால் மனங்களே நிறையுமே

வயிற்றுப்பசி என்றாலுமென்ன
கல்வியோ இல்லிடமோ தேவையாயின்
நம்மால் முடிந்ததை நாம் கொடுக்க
நலமே காண்போம் வாழ்வினிலே.

மனிதர்களை மதிப்போமே என்றும்
மனிதங்களை மறந்துவிடமாட்டோமே
மனிதர்களை மதியாது விடும் பொழுது
மனிதங்கள் நமக்குள் மறைந்து கொண்டதே

பேதங்கள் நம்மோடு இணையாமல்
கல்லவை எதுவெனக் கண்டு கொண்டே
நம்கைகள் துணைபுரிய முன்வரவே
நமக்குள்ளே மனிதங்கள் மறையவில்லையே.

## குறிப்புகள்!

- வெற்றிலை-பாக்கு, புகையிலை, சீவல், புகை போன்றவற்றைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவோரின் வாயானது, உட்புறம் மென்மைத் தன்மையை இழந்து, நார் நாராகக் காட்சியளிக்கும். இது, வாய் புற்றுநோய்க்கு வழிவகுக்கும்.
- இரவு உணவுக்குப் பிறகு நீண்ட நேரம் வெறும் வயிறாக இருப்பதால், ஆசிட் நிறைய சுரந்திருக்கும். எனவே, காலையில் கட்டாயம் சாப்பிட வேண்டும். சரிவர சாப்பிடாமல் பழகி விட்டால், அது வயிற்றில் புற்றுநோயை உருவாக்கும்.
- இரவு வெகு நேரம் வேலை செய்ய வேண்டியிருந்தால், மறுநாள் காலையில் வாக்கிங், ஜாகிங் போகக்கூடாது. அது, பயனளிப்பதற்குப் பதிலாகக் கெடுதலையே தரும்.



# இதோ பார்! செய்துகாட்டுகிறேன்

புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர் ஆல்ப்ரெட் லார்ட் டென்னிசன் பற்றி பிரபல கீழ்திசை இயல் அறிஞர் மாக்ஸ்முல்லர், கீழ்கண்ட சுவையான சம்பவத்தைக் கூறுகிறார்:

நான் நண்பர்கள் சிலருடன் டென்னிசன் வீட்டில் தங்கியிருந்தேன். டென்னிசன் எப்போதும் புகைபிடிப்பார். அவரால் புகைபிடிக்காமல் இருக்க முடியாது. ஒருநாள் சுருட்டு பிடிக்கும் பழக்கம் பற்றி காரசார விவாதம் நடந்தது. எல்லோரும் டென்னிசனை கிண்டல் செய்தனர்.

“இந்த ஆள் கையில் சுருட்டு இல்லாமல் வாழவே முடியாது” என்றனர்.

உடனே, “யாராவது ஒருவர் எதையாவது நினைத்தால் அதைச் செய்ய முடியும்” என்றார் புலவர்.

“ஐயா, புலவர் டென்னிசன் அவர்களே! அதெல்லாம் உறுதியான ஆளுக்குதான். உம்மை போல வழவழா கொழகொழா பேர்வழிகளால் அதெல்லாம் முடியவே முடியாது” என்று நக்கல் செய்தனர்.

டென்னிசனுக்கு ஒரே கோபம். இதோ பார்! செய்து காட்டுகிறேன் என்று ஜன்னல் வழியாக புகையிலை பாக்கெட்டையும் அதை வைத்து ஊதும் குழாயையும் (பைப்) தோட்டத்தில் எறிந்தார். எல்லோரும் திகைத்து நின்றனர். ஒன்றும் பேசவில்லை.

மறுநாள் டென்னிசன் மிகவும் உற்சாகமக வேலைகளைச் செய்தார். இரண்டாம் நாள், திடீரென ‘மூட்’ அவுட்டானது; பிறகு வழக்கம்போலக் காணப்பட்டார்.

மூன்றாம் நாள் டென்னிசன் பித்துப் பிடித்தவர் போல இருந்தார். அடக் கடவுளே! டென்னிசனை இப்படி பகிடி செய்திருக்க வேண்டாமே என்று எண்ணி நண்பர்கள் வருந்தினர். ஆனால் யாருக்கும் மீண்டும் இது பற்றிப் பேசவே அச்சம்.

அன்று காலையில் டென்னிசன் திடீரென்று தோட்டத்துக்குள் நுழைந்தார். தூக்கி எறிந்த புகையிலை பாக்கெட்டையும் பைப்பையும் (சிகார் குழாய்) சேகரித்தார். வழக்கம் போல புகை பிடித்தார்.

ஆனந்தம் பரமானந்தம்.

எல்லோரும் கப்பு சிப்பென்று அவரவர் வேலையைப் பார்த்தனர். “சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி” என்று எதையும் செய்ய விரும்பவில்லை.

“தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்” என்ற பழமொழி சரியாய் போனது. ■

“நம்மை உயர்த்துவது செயலன்று, செய்வதில் உள்ள ஆர்வம்”

– பிரௌனின்

மனச்சான்று நீதிபதியாக இருந்து தண்டனை தருமுன் நண்பனாக இருந்து முதலில் எச்சரிக்கை செய்யும்.

– ஸ்டனிஸ்லாஸ்

நன்மை செய்தவருக்குத் திருப்பி நன்மை செய்வது உலக வழக்கம். ஆனால், தீமை செய்தவருக்கும் நன்மை செய்வது உத்தமர் வழக்கம்.

– குருநானக்

# மாணவர் பக்கம்

கபொத உயர்தரம்

## கிறிஸ்தவம்

- நில்மினி கஜேந்திரன் -



### தொடக்ககால கிறிஸ்தவ சமூகமும் திருவழிபாடும் :

திருச்சபையில் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையா கவே ஆரம்பமாகியது. இதன் ஸ்தாபகராகிய இயேசுக்கிறிஸ்து ஒரு யூதரே. அவர் தேர்ந்தெடுத்த பன்னிரு அப்போஸ்தலர்களும் யூதர்களே! பெந்தக்கோஸ்து தினத்தன்று அப்போஸ்தலர்களின் போதனைகளைக் கெட்டு, மனம் திரும்பி இயேசுவை ஏற்று திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் இணைந்து கொண்டவர் களும் யூதர்களே. இயேசு ஒரு யூத குடும்பத்தில் பிறந்து யூத மத ஒழுங்குகளுக்கமைய வளர்க்கப்பட்டார். இயேசுவும் யூத சடங்குகள், வழிபாடுகள், விழாக்களில் பங்குபற்றியதை நற்செய்திகள் எமக்குக் கூறுகிறது. ஆதிக்கிறிஸ்தவர்களும் தங்களுக்கே உரித்தான அப்பம் பிட்குதல், திருமுழுக்கு போன்ற சடங்குகள், கொண்டாட்டங்களை தனிநபர் வீடுகளில் நடத்தினாலும், பொது வழிபாடுகள், பொதுக் கொண்டாட்டங்க ளுக்கு எருசலேம் ஆலயத்திற்கே சென்றனர். இவை ஜெருசலேம் ஆலயம் உரோமையரால் 70ல் தகர்த்து தரைமட்டமாக்கும் வரை இடம்பெற்றது.

இதன் பின்னர் சிதறுண்டு போன யூதர்கள் 80களில் பரிசேயர்களின் தலைமையில் யூத மதத்தை புனரமைக்கும் நோக்கில் 'ஜம்னியா' எனும் இடத்தில் கூடினர். இச்சங்கத்தில் கடவுளால் சபிக்கப்பட்ட, மரத்தில் தொங்கிய இயேசுவை வழிபட்ட கிறிஸ்தவர்களை ஜெருசலேம் ஆலயத்தில் வழிபட அனுமதித்ததாலே, தீட்டுப்படுத்தியதாலேயே கடவுள் தங்கள் ஆலயத்தை அழித்துவிட்டார் எனக் கருதி கிறிஸ்தவர்களை இனி வழிபாடுகளுக்கோ, கொண்டாட்டங்களுக்கோ அனுமதிப்ப தில்லை என முடிவெடுத்தனர். இதன் பின்னர் முதல் கிறிஸ் தவர்கள் தங்கள் வழிபாடுகளை கொண்டட்டங்களை நடாத்த வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. இக்காலத்தில் புதிதாய் திருச்சபையில் சேர்ந்தவர்கள் யூத மதம், வழிபாடு, பண்பாடுகளை அறியாததினால் இவர்களுடன் சேர்ந்துகொண்டனர். இதுவே கிறிஸ்தவர்கள் தங்களுக்கென ஒரு தனி கிறிஸ்தவ வழிபாட்டு முறையை அமைப்பதற்கு தொடக்கமாயிருந்தது.

இவ்வகையில் உருவாகிய முதல் கிறிஸ்தவர்கள் தமது வழிபாட்டு முறையை ஆரம்பிப்பதற்கு தமக்கு இதுவரையில் பழக்கப்பட்ட, தாம் இதுவரை பின்பற்றிய யூத வழிபாட்டு முறைகளில் இருந்து உள்வாங்கிய அம்சங்களை அடிப்படையாய் வைத்து, கிறிஸ்தவ கொள்கை கோட்பாடு களின்படி புதிய அர்த்தம் கொடுத்து சில வழிபாட்டு மாற்றங்க ளையும் சேர்த்துக்கொண்டனர். உதாரணம் : யூதர்கள் அனுசரித்த சபாத் ஓய்வுநாளை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றி னர்; யூதர்களின் பாஸ்கா, கிறிஸ்துவின் பாஸ்காவாகவும், யூதர்களின் பெந்தகோஸ்து கிறிஸ்தவர்களின் பரிசுத்த ஆவியின் வருகை விழாவாகவும், திருச்சபையின் பிறப்பு விழாவாகவும் மாறியது. இவ்வாறு யூத வழிபாட்டு அம்சங்களை தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் வழிபாட்டில் காண்கிறோம்.

யூதர்கள் தம் வரலாற்றிலே பல அன்னிய நாடுகளின் ஆட்சியின் கீழ் வாழ்ந்து வந்துள்ளனர். கிறிஸ்தவம் தொடங்கி யது முதல் அண்மித்த காலம் வரை கிரேக்க ஆட்சியின் (கி.மு. 333 - கி.மு. 63) உரோமையின் ஆட்சியில் (கி.மு. 63 - கி.பி 305) வாழ்ந்து வந்துள்ளனர். அன்னியர்கள் குறிப் பாக தமது பண்பாடு, கலாச்சார, பழக்க வழக்கங்களை யூதர்கள் மேல் திணிக்க முயற்சித்திருக்கிறார்கள். இதனாலேயே பின்னர் பல கிரேக்க பண்பாடுகளின் கலாசாரத்தின் பழக்க வழக்கங்கள், மரபுகளை தாக்கங்களை கிறிஸ்தவத்தில் காணமுடிகிறது.

இந்தவகையில் தொடக்க கிறிஸ்தவ வழிபாட்டில் யூத கலாச்சார தாக்கமான, ஏழு நாட்களைக் கொண்ட வாரம், ஞாயிறு தினத்திற்கு மாற்றப்பட்ட சபாத், விசுவாசிகள் மன்றாட்டு, இறைவார்த்தை வழிபாடு, அப்பம் பிட்கும் வழி பாடு, பாஸ்கா விழா, பெந்தகோஸ்து விழா, இறைபுகழ் மாலை போன்றவையும் மற்றும் கிரேக்க கலாச்சார மாற்றங்களாக திருவழிப்பாட்டில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான சொற்கள், வளர்ந்தோருக்கான திருமுழுக்கு வழிபாட்டில் பயன்படுத்தப்படும் தைலம் பூசுதல், தீய ஆவிகளை விரட்டுதல், முழு இரவுத் திருமுழுக்கு, திருமுழுக்கை திருவிழிப்புக் கொண்டாட்ட

20ம் பக்....

# வேண்டுதல்கள்!



ஜீவராசிகள் பல விதம்
ஜீவ உத்திகளும் பல விதம்
அந்த ஒருவனை நோக்கி மட்டும்
எத்தனை அம்புகள் .....
படைத்தது என் பாவமா என்று
அவனை அவனே கேள்வி கேட்க
தூண்டும் உலகம் இது!

ஒரு நாளில் தொடக்கத்திலே
உலகில் எத்தனை வேண்டுதல்கள் ....
ஒரு நோயாளி தனக்கு சுகம் வேண்டி மன்றாடினால்
சவப்பெட்டிக் கடைக்காரன்
பல பிணம் விழ வேண்டும் என்று மன்றாடுகிறான்.
ஒரு தனியார் வைத்தியன் பல நோயாளிகளின்
வருகைக்காக மன்றாடுகிறான்
கொல்வதா? சுகப்படுத்துவதா?
இல்லை நோயை நீடிப்பதா?
அப்படி ஒரு குழப்பம் அவனுக்கு ....

ஒரு பிச்சைக்காரன் தட்டில் பல சில்லறைகள்
விழ வேண்டும் என்று மன்றாடுகிறான்
மளிகைக் கடைக்காரன் தன் கடைப்பொருட்கள்
விற்பனையாகி முடிய மன்றாடுகிறான்
ஒரு தினக்கூலியோ தன் பாக்கெட்டில்
மிஞ்சியிருப்பதும் செலவாகிவிடக்
கூடாதென்று மன்றாடுகிறான்
செலவைக் கொடுப்பதா? வியாபாரத்தைக் கெடுப்பதா?
இல்லை உலோபிகளை வளர்ப்பதா?
இப்படி ஒரு குழப்பம்

ஒரு மதுக்கடை காரன் பல பேர் குடியில்
விழ மன்றாடுகின்றான்
போதையில் உழல்பவன் மனைவி, பிள்ளைகள்
அவனைத் திருத்த ஒப்பாரியுடன் மன்றாடுகிறார்கள்
ஒரு போக்குவரத்து போலிஸ் போதையில்
வாகனம் செலுத்தும் பலர் சிக்க வேண்டி
மன்றாடுகிறான்
திருத்துவதா? இல்லை குடியை தொடர வைப்பதா?
இல்லை மாட்டி விடுவதா?
இப்படிக் குழம்பி போகிறான் இறைவன்...

கணவன் ஒருவன் நல்ல மாமிசத்தோடு சாப்பாடு
கிடைக்க யாசிக்கிறான்
மாடு, கோழி, மீன் மற்ற உயிரினங்கள் எல்லாம்
கழுத்தில் கத்தி படாத நீண்ட ஆயுளை கேட்கின்றன
அறுத்து தொங்க விட்டவனோ
அவை விற்று முடிய வேண்டுகிறான்
இப்போது அறுத்துத் தின்னக் கொடுப்பதா?
இல்லை காப்பதா?
இப்படிக் குழம்பிப் போகின்றான்

அடடா ஆண்டவன் ஒருவனாய் இருந்து
அவன் படும் பாடு ....
இந்த வேண்டுதல் அம்பில் குத்துப்பட்டு
குத்துப்பட்டு குருதி கசியும் போதும் கூட
வேண்டுதலும் நிற்பதில்லையே
ஒருவன் இன்னொருவனைச் சார்ந்து வாழ
எழுதிய விதிக்கோவையால்
வருகின்ற வினை இது தான் என்பது
அதை பட்டு உணரும் அவனுக்கே தெரியும்.

ஆனாலும் அவன் ஆண்டவன் ....
அவன் சித்தமே உலகில் அரங்கேறும் நாடகம்....
அதற்காய் வேண்டுதல்கள் நிராகரிக்கப்படும் என்றல்ல
இறைவனை இன்றுவரைக்கும் வாழ வைக்கும்
மனித குலம் ஏனென்றால்
கேட்பவன் பெற்றுக்கொள்கிறான்
தேடுபவன் கண்டடைகிறான்
தட்டுபவனுக்கு திறக்கப்படுகிறது.



# மரணத்தைத் தேடி நீ ஓடாதே!

ஒரு முயல் தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத்தது. அதற்குக் காரணம்?!!!.

ஒரு பக்கம் வேடன் விரட்டுகிறான். இன்னொரு பக்கம் நாய் .... மறுபக்கம் புலி... என எந்தப் பக்கம் திரும்பினாலும் முயலுக்கு எதிரிகள்....!!

சரி நாம் வாழத்தகுதியற்ற விலங்கு என்று முடிவெடுத்தது. எப்படியெல்லாம் தற்கொலை செய்யலாம் என்று சிந்தித்துப் பார்த்தது. இறுதியாக.... குளத்தில் குதித்துத் தற்கொலை செய்து கொள்வோம் என்று சென்றது முயல். அப்போது முயலின் வருகைக்கு அஞ்சி அங்கு குளத்தின் கரையில் இருந்த தவளைகள் குளத்துக்குள் தாவிக் குதித்ததை முயல் பார்த்தது. உடனே முயல் சிந்தித்தது...

'அட!! நம்மையும் பார்த்துப் பயப்பட இந்த உலகில் உயிரினங்கள் உள்ளனவா??' என்று தன் தற்கொலை முடிவை மாற்றிக்கொண்டு தன்னம்பிக்கை கொண்டால் நாமும் வாழலாம் என்று மனமாற்றம் கொண்டது ..... 'தற்கொலை செய்து கொள்வதற்கும் வலிமையான மனம் வேண்டும்' என உணர்ந்தது அவ்வளவு வலிமையான மனமிருக்கும் நாம் ஏன் சாகனும்? வாழ்ந்துதான் பார்ப்போம்" என்று காட்டுக்குள் மீண்டும் ஓடி ஒளிந்தது".

**கதை சொல்லும் நீதி**

மரணத்தைத் தேடி நீ ஓடாதே!
மரணம் உன்னை தேடும் வரை வாழ்ந்துவிடு!
மரணமே வந்தாலும் எதிர்க்கத் துணிந்து விடு!



# எங்க பாட்டி சொன்னது ...

**1. சாப்பிட்டதும் உடனே குளித்தல் நல்லதல்ல**

காரணம் – கால், கைகளுக்கு ரத்தம் அதிகம் வரும். அப்புறம் பாவப்பட்ட குடலுக்கு ஒன்றுமே இல்லை. அதனாலே அது கோவிச்சுக்கும்.

**2. சாப்பிட்டதும் நடக்காதிங்க**

காரணம் – உங்க வயிறு சாப்பிட்ட சத்தை எடுக்க வேண்டாமா? நடந்து அதை கெடுத்துக்காதிங்க. கொஞ்ச நேரத்திற்கு அப்புறம் நடக்கலாம்.


**3. சாப்பிட்டதும் தூங்கு மூஞ்சியாகிடாதிங்க**

காரணம் – உடனே தூங்கினால் சமீபாடு வேலை உள்ளுக்குள்ள சரியாவே நடக்காது.

**4. பழம் வேண்டாம்**

காரணம் – உடனே சாப்பிட்டா, வயிற்றுக்குள் காற்று போய் வேற வியாதி எல்லாம் வரும். தேவையா....?

சாப்பிட்டமா, கொஞ்ச நேரம் ஒழுங்கா நல்ல பிள்ளையாக இருந்தமா என்று இருக்கனும்.



# பல்லில்லாத பெரியவர்

புகழுக்கு மயங்காத அரசன் ஒருவன் இருந்தான். அவன், "என்னைப் புகழ்ந்து நான் மகிழும்படி செய்பவர்களுக்கு 5000 தங்கக் காசுகள்" என நாட்டில் போட்டி ஒன்று அறிவித்தான்.

மன்னனை மகிழ்விக்க எந்த முயற்சி வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், அவர் மகிழவில்லை என்றால் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்பது. விதி.

கவிஞர்கள், புலவர்கள், விகடகவிகள் என பலரும் மன்னனை மகிழச் செய்ய பாடினார்கள், ஆடினார்கள், நகைச்சுவையாகப் பேசினார்கள், பலவாறு புகழ்ந்தார்கள்...

தோல்வியைத் தழுவி சிறைத்தண்டனை அல்லது அடி உதையும பெற்றுச் சென்றார்கள்.

ஒரு புத்திசாலி சிறுவனும் மன்னனை மகிழ்ச்சியுறச் செய்ய போட்டியில் கலந்து கொண்டான்.

அவன் முறை வந்தபோது, ஒரு மாம்பழத்தை மன்னரிடம் கொடுத்து 'அரசே! உலகிலேயே மிகவும் விலைமதிக்க முடியாத மாம்பழம் இது" என்றான்.

அதற்கு அரசன், "ஏய் பொடியனே ... எல்லாவகை மாம்பழமும் எனக்குத் தெரியும்...." என்று கர்ஜித்து... தன் காவலாளிகளை அழைத்து "இவன் சிறுவன் என்பதால் இவனுக்கு பெரிய தண்டனை கொடுக்க வேண்டாம் ... அவன் கொண்டு வந்த மாம்பழத்தை அவன் வாயில் முழுமையாகத் திணித்து அவனை உண்ண வையுங்கள்" என்று கட்டளை இட்டான். சிறுவனின் நிலை கண்டு அவையே பரிதாபப்பட்டது.

ஆனால் சிறுவனோ விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்... அரசனை நோக்கி,

"மன்னாதி மன்னனே! அடியேனை மன்னிக்கவும். இந்த வரிசையில் தங்களைக் காண காத்திருக்கிறாரே அந்த முதியவர், அவர் நிலைமையை யோசித்துப் பார்த்த போதுதான் அடக்கமுடியாத சிரிப்பு வந்து விட்டது என்றான்.

அரசனுக்கு சிறுவனின் செய்கை மிக்க ஆர்வத்தை ஏற்படுத்தி விட்டது.

"என்னவென்று தெளிவாகச் சொல்" என்று அரசன் கேட்டான்.

"மன்னா! நான் கொண்டு வந்ததோ ஒரே ஒரு மாம்பழம். அதை அப்படியே சாப்பிடும் படி தண்டனை கொடுத்து விட்டீர்கள்.... ஆனால் அந்தப் பல் இல்லாதப் பெரியவரோ மிகப் பெரிய பலாப் பழத்துடன் உங்களைக் காண வந்திருக்கிறார்.... அவருக்கு இதே மாதிரி தண்டனை கொடுக்கப்பட்டால் எப்படி இருக்கும்என்று நினைத்துப் பார்த்தேன்..." என்று சொல்லி மீண்டும் சிரிக்க.... அரசன் தன்னையும் மறந்து அவையினரோடு சேர்ந்து விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்.

சிறுவன், 'எங்கள் மன்னா! இந்த உலகில் புகழுக்கு மயங்காத ஒருவன் உண்டு என்றால் ... அது நீங்கள் மட்டும்தான் மன்னா!" என்றான்.

அரசனுக்கோ தலைக்கால் புரியவில்லை... தன்னை மகிழ்வித்த அந்தச் சிறுவனை வெகுவாகப் பாராட்டி பரிசுகள் வழங்கினான். பின் தன் தவறை யும் உணர்ந்து அப்பாவி மக்களை விடுதலை செய்து மெய்யான புகழையும் பெற்றான். ■

# காலம் கடக்கு முன்...



*கண்களே!*
*பார்வையுள்ள போதே*
*கடவுளின் வார்த்தை படி*
*பார்வை மங்கிய பின்*
*கண்ணாடியால் காலம் தள்ளாதே!*

*காதுகளே!*
*கேள்வி ஞானம் உள்ளபோதே*
*மறையுரைக்குச் செவிமடு*
*காலம் தாழ்த்த*
*செவிடன் காதில் ஊதிய சங்குதான்*
*வாஞ்சித்தாலும்*
*வார்த்தை செவிகளில் விழாது.*

*கைகளே!*
*நடுக்கம் வருமுன்னே*
*கைகூப்பிக் கடவுளைத் தொழு*
*தளர்வு வருமுன்னே*
*ஐம்பத்து மூன்று மணி எண்ணு.*

*கால்களே!*
*வலுவுள்ள போதே*
*முடிந்தவரை முழந்தாளிடு*
*இப்போதெல்லாம் இளவயதுக்கும்*
*முட்டுவலியால் பிரச்சினை*

*லூக்கா 17ல்*
*தொழுநோயாளர் கதை படித்து*
*எல்லாம் தந்த இறைவனுக்கு*
*எந்நாளும் நன்றி சொல்!*

— ஜீத்ரி



# என்னைக் கவர்ந்த ஆடலழகி



● கலைக்கோட்டு சி. இருதயராஜ்

பால் மணம் மாறாத
பச்சிளங் குழந்தையவள்
பரவசமூட்டினாள் என்னை


எழுந்து ஓரடிகூட
எடுத்து வைக்காதவள்
என்னை அவளது நடனத்தால்
பரவசமூட்டினாள்

குழந்தைகளை என்னிடம்
வரவிடுங்கள் என்றாரே இயேசு
இந்தக் குழந்தையை இன்று
அவர் பார்த்திருந்தால்
குழந்தைகளை நடமாட விடுங்களென
இயேசுவின் வார்த்தைகள்
திருவிவிலியத்தில்
இடம் பிடித்திருக்குமல்லவா!

நானே சாட்சியமானேன்.

இவளது தாத்தாவை நான்
சந்திக்கச் சென்றேன்
அப்போதே அவளைக் கண்டேன்
தனது சிறிய விழிகளினால்
என்னைக் கூர்ந்து நோக்கினாள்

எனது கரங்களைத் தட்டினேன்
எழுந்து நிற்க முடியாத அவள்
முழந்தாளிட்டபடி
எனது தாளத்திற்கு இசைய
கரங்களைத் தட்டினாள்
அசைந்தசைந்து ஆடினாள்
தேவலோக நடன மாதர்களெங்கே!ஷ
இவளல்லோ
என்னைக் கவர்ந்த ஆடலழகி!



# சுவையான சுருட்டு...

பிரபல கண்டுபிடிப்பாளர் தாமஸ் ஆல்வா எடிசன் வாழ்வில நடந்த சுவையான சுருட்டு சம்பவம்:

தோமஸ் ஆல்வா எடிசன் விலையுயர்ந்த, பிரபல ஹவானா (கியூபா புகையிலை) சுருட்டுக ளைப் பிடிப்பது வழக்கம். அவர் அறைக்குள் வரும் நண்பர்கள் அனைவரும் அதைக் கைப்பிடி எடுத்து பாக்கெட்டுக்குள் திணித்துக் கொள்வர். அவருக்கோ சொல்லவும் முடியவில்லை் மெல்ல வும் முடியவில்லை.

இது பற்றி அவருடைய நண்பர் கேரியுடன் அங்கலாய்த்தார்.

“அட! இது என்ன கஸ்டம்! எல்லாவற்றையும் ஒளித்து வையுங்கள் அப்பத்தான் உங்கள் நண்பர் களுக்குப் புத்தி வரும்” என்றார் கேரி.

“அதுதானே முடியவில்லை. இதெல்லாம் எங்கே ஞாபகத்துக்கு வருகிறது? இன்னொரு சுவையான விஷயத்தைச் சொல்லுகிறேன் கேள்” என்று தொடர்ந்தார் எடிசன்

“என் செயலாளர் ஜோன்சனை உனக்குத் தெரியுமில்லையா?அவர் அருமையான ஒரு தந்திரம் செய்தார். அவருக்கு சுருட்டு கம்பெனி நண்பர் ஒருவர் இருந்தார். அவரிடம் சொல்லி, என் நண்பர்களுக்குப் பாடம் கற்பிக்க, ஒரு விநோத சுருட்டு செய்யச் சொன்னார். நானும் இது பிரமாதமான ஐடியா என்று புகழ்ந்தேன். அதாவது, முட்டைக்கோசு இலையைக் காய வைத்து அதை பழுப்பு / பிரவுன் காகிதத்தில் சுருட்டு போலச் செய்து வைப்பது. (அந்தக் கண்றாவியைச் சுவைத்துவிட்டால் மீண்டும் தன் நண்பர்கள் சுருட்டு பக்கமே வரமாட்டார்கள் என்று எடிசன் நம்பினார்.)

கொஞ்ச காலம் ஆயிற்று; வழக்கம்போல விலையுயர்ந்த சுருட்டுகள் காணாமற்போய்க் கொண்டேயிருந்தன. திடீரென்று முட்டைக்கோசு இலை சுருட்டு ஞாபகத்துக்கு வந்தது. உடனே அந்த நண்பரைத் தொடர்பு கொண்டு, “என்ன ஆயிற்று நம் திட்டம். எப்போது புதுவகை சிகரெட் டுகளை அனுப்பப் போகிறீர்கள்?” என்றேன்.

நாம் ரொம்ப நாளைக்கு முன்னரே அனுப்பி விட்டேனே! என்றார் அவர்.

உடனே நான் என் மனேஜரைக் கூப்பிட்டு எங்கே அந்த சுருட்டுகள்? என்றேன்.

என் மனேஜர் சொன்னார்: ஒரு பார்சல் வந்தது. நீங்கள் கலிபோர்னியா செல்லுகையில் அதை உங்கள் கைப்பைக்குள் வைத்துவிட்டேனே என்றார்.

கேரி, என்ன நடந்தது தெரியுமா? அந்த சனியன் பிடித்த முட்டைக்கோசு சுருட்டுகள் முழுதையும் நானே குடித்துத் தீர்த்திருக்கிறேன்!!

(நண்பர்களை முட்டாளாக்க நினைத்த தாமஸ் ஆல்வா எடிசன் தானே முட்டாளானார்!)

■



# கடுகு சிறிதானாலும் காரம் பெரிது

அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.



**அ**ண்மையில் ஒரு பயணம். பேருந்தில் நகர முடியாத அளவிற்கு சனக்கூட்டம். அவ்வேளையில் ஒரு இளம் தாய் தன் மகனை பேருந்தில் ஏறுவதற்காகக் கூப்பிடுகின்றார். அவன் வரமறுத்து பேருந்து நிலைய கடையொன்றின் அருகில் நின்று அடம்பிடித்துக்கொண்டிருந்தான். அப்போது தான் உற்றுநோக்கினேன். அவன் நின்று கொண்டிருந்த கடை ஒரு வர்ண மீன்கள் விற்பனை செய்யும் இடமாகும். அவன் தன் தாய் இடத்தில் 'கலர் மீன்கள் வாங்கித் தாருங்கள் என்று கேட்டிருப்பான் போல' என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அவ்வேளையில் அவனது தாயார் பேருந்து சாரதியிடம் "சற்றுப் பொறுங்கள் ஓர் இரண்டு நிமிடத்தில் வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு அந்தக் கடைக்குள் நுழைந்தார். அவன் கேட்டபடியே வர்ண மீன்கள் மட்டுமல்ல, சிறிய மீன்தொட்டியுடனும் கூடவே அந்தத் தாய் வந்தார். அப்போது அந்தச் சிறுவனின் முகத்திலிருந்த மகிழ்ச்சியினை வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது. அவ்வளவு கொள்ளை அழகு.

பேருந்து புறப்படத் தொடங்கி சிறிது நேரத்தின் பிற்பாடு எனக்கருகிலிருந்தவர் தமது இடம் வந்தவுடன் இறங்கி விட்டார். இப்போது அச்சிறுவன் தனது தாயுடன் எனக்கருகில் உட்கார்ந்து கொண்டான்.

நான் அவனிடத்தில் எனக்குத் தெரிந்த சிங்களத்தில் உரையாடத் தொடங்கினேன். அப்போது அவனுக்குள்ளிருந்த மீன் தொட்டிக் கனவின் உலகம் வெளிப்படத் தொடங்கியது.

அவனது சிறிய வயதுக் கனவு வீட்டில் அவனுக்கெனவொரு மீன்தொட்டி. இப்போது அவன் ஆறாம் தரத்தில் படிக்கின்றான். 'அவனது வீட்டுக்கருகிலுள்ள ஓரளவு வசதி படைத்தவரின் வீட்டில் பெரிய மீன் தொட்டியும் அதில் விதம் விதமான மீன்களும் உள்ளனவாம். அவன் அதனைப் பார்க்கின்ற போதெல்லாம் தனக்கும் அவ்வாறானதொரு மீன் தொட்டி வேண்டுமென அடம்பிடித்து வருகின்றான்' என்று அவனது தாயார் கூறினார். "கலர் மீன்கள் என்றால் உனக்கு பிடிக்குமா" என்று கேட்டேன். அவன் அளித்த பதிலானது, "மீன் தொட்டியில் அங்கும் இங்கும் ஓடுகின்ற மீன்களின் அசைவு இருக்கின்றதே அதனைச் சொல்ல வார்த்தைகளே கிடையாது. அதுமட்டுமல்லாது அது செல்லும் திசையெல்லாம் நம்மையும் இழுத்துச் செல்கிறது" என்றான். அவன் அளித்த பதிலைக்கேட்டு ஒரு கணம் திகைப்படைந்த நான், மறுபக்கம் யாரோ ஒருவர் முன்னாளில் கூறிய வார்த்தைகளை நினைவுகளில் மீட்டிக்கொண்டேன். 'மீன் தொட்டியானது மன அழுத்தத்தினைக் குறைத்து, மன அமைதியினைக் கூட்டுகின்றது. மனதிற்கு மகிழ்வி

னைக் கொண்டு வருகிறது. பார்வையினைச் சீராக்கி, கூர்மையாக்குகின்றது/. அதனாற்தான் இன்று பொதுமக்கள் கூடுமிடங்களில் பெரிய மீன் தொட்டிகளை பொழுதுபோக்கு சாதனமாகவும், மக்களின் மகிழ்ச்சியினைக் கூட்டுவதற்கான வாய்ப்பாகவும் பயன்படுத்துகின்றார்கள்.

மீன்களின் அசைவுகள் மனதிற்கு நிம்மதியைத் தரும். அமைதியை ஏற்படுத்தும். வர்ண மீன்கள் வளர்ப்பது உடலுக்கும், உள்ளத்துக்கும் மகிழ்ச்சியைத் தரும். மீன்கள் சுறுசுறுப்பு, வலிமை, வெற்றியின் அடையாளமாகவும் கருதப்படுகிறது. இரண்டு மீன்கள் இணையாக நீந்திச் செல்வது ஒற்றுமையைக் குறிப்பதாகும். நம்மைச் சுற்றி இரண்டு வகையான சக்தியின் ஓட்டங்கள் இருப்பதாகவும், அது தூங்கும் போதும், விழித்துக்கொண்டிருக்கும் போதும் உருவாகும். மீன்கள் கண்களைத் திறந்த நிலையிலேயே தூங்கும் தன்மை கொண்டவை. இதனால் அவை என்றும் தீய சக்தியை நுழைய விடாது. தீய சக்தியை உடன் இழுத்து, தீமையை ஏற்றுக்கொண்டு வீட்டில் இருப்பவர்களைக் காப்பாற்றுகிறன. சிவப்பு நிற மீன்கள் வளமையையும், பச்சை நிற மீன்கள் வளர்ச்சியையும், மஞ்சல் நிற மீன்கள் செயல்திறனையும் வளர்க்கும் எனப்படித்த குறிப்புக்கள் கூறுகின்றன. இன்று பெரும்பாலான தனியார் வைத்தியசாலைகளில் பாரிய வர்ண மீன் தொட்டிகளைக் காணலாம். அங்கு அவை நோயாளிகளுக்கு சுகத்தினை, பலத்தினை, மனத்திடத்தினை கொணரும் சாதனமாக (therapy) பயன்படுகிறன.

அடுத்து அந்தச் சிறுவனிடத்தில் என்னைக் கவர்ந்த ஒரு விடயம் யாதெனில், தான் கொண்ட தீர்மானத்தில் உறுதியாக இருந்தான். ‘எனக்கு என் அம்மா மீன் தொட்டி வாங்கித் தந்தால் மாத்திரம்தான் பேரூந்தில் ஏறுவேன்’ என்பது அவன் கொண்டிருந்த உறுதியான நிலைப்பாடு. அதிலிருந்து பின்வாங்க அவன் தயாராகவில்லை. ஏனெனில் அவனது தாயாரும் அத்தகைய உறுதி மொழியுடன்தான் அந்நாளில் சந்தைக்கு அழைத்து வந்திருந்தார். இது இன்றைக்கு மிகவும் முக்கியமான தேவையாகும். உலகமயமாக்கல் எனும் அரக்கனுள் சிக்கி நுகர்வுக் கலாசாரத்தால் அடிக்கடி நமது தேவைகளை மாற்றிக்கொள்ளும் மனிதர்கள், கொண்ட கொள்கையில் உறுதியாக இருப்பதில் தவறிவிடுகின்றார்கள். இந்தச் சிறுவன் அழகாக அந்தப் பாடத்தினை எனக்குப் பேரூந்துப் பயணத்தில் நடாத்தினான்.


சிறுவர்களிடமிருந்து நாம் கற்பதற்கு நிறையவே இருக்கின்றன. எனவே அவர்களை ஒன்றுமற்றவர்கள் என்று புறக்கணித்து விடாதீர்கள்.

**அவர்களும் நம் ஆசான்களே!** ■




வரிக்குதிரை (Zebra) உடலில் உள்ள கறுப்புப் பட்டைகளின் பயன் என்ன தெரியுமா?
அவை சூரிய ஒளியில் பளபளத்து நெளிவது போன்ற பிரமையை உண்டாக்கும்.
அதனால் இதனை வேட்டையாட வரும் சிங்கம், சிறுத்தை போன்றவை ஏமாந்து திசை திரும்பிப் போகும். இயற்கை அளிக்கும் பாதுகாப்பு இது.

— கறுப்புப் பட்டைகள் எல்லா வரிக்குதிரைகளுக்கும் ஒரே மாதிரி இருக்காது. விரல் ரேகை மனிதனுக்கு மனிதன் வேறுபடுவதைப் போல, வரிக்குதிரைகளின் வரிகளும் ஒன்றுக்கொன்று மாறுபடும். வரிக்குதிரைகளின் குட்டிகள் இதனை ஞாபகத்தில் வைத்திருந்து தாயை அடையாளம் காண்கின்றன.





கண்ணாடியின் முன்னால் நின்றுகொண்டிருந்த மனைவி சோகமாகச் சொன்னாள் கணவனைப் பார்த்து,
"நான் எவ்வளவு அசிங்கமாயிட்டேன், எனக்கே என்னைப் பார்க்கப் பிடிக்கல்லை, என் மனசுக்கு ஆறுதலா ஏதாவது சொல்லுங்களேன்"
அவன் சொன்னான்,
"அடே! உன் கண்பார்வை எவ்வளவு தெளிவாக இருக்கு!"

## அன்னை மரியாவின் உதவியை நாடினால் ....

- 'ஆம்' என்றதால் விண்ணகம் நோக்கி பயணிக்கின்ற வாய்ப்பைப் பெற்றார். நாமும் இறைவனுக்கு 'ஆம்' என்றால் நம்மை அரவணைத்து அவருடைய வீட்டில் சேர்த்துக்கொள்வார்.
- கவனத்தைச் சிதற விடாமல் இறைவன் மீது நம் கண்களைப் பதிக்க மரியா நமக்குத் சொல்லித் தருகின்றார்.
- இறைவனை அடிக்கடி நினைத்தால் விண்ணக வாழ்வை அடைய வாய்ப்பு கிடைக்கும்.
- நம்மைப்போல் மனிதப் பிறவியாக வாழ்ந்து அன்னை விண்ணகம் சென்று எமக்காகக் காத்திருக்கின் றார்.





## சின்ன விஷயங்கள் சிறந்த வாழ்க்கை

**பாதிக்காமல் பார்த்துக்கொள்வது .....**

ஒரே நேரத்தில் நான்கு பந்துகளைத் தூக்கிப் போட்டுப் பிடிக்கும் வித்தைக்காரரை சர்க்கஸில் பார்த்தான் அந்தச் சிறுவன். "உங்கள் பந்துகள் விழவே விழாதா?" என்றான். அவர் சொன்னார், "எப்போதாவது ஒன்றிரண்டு பந்துகள் கைநழுவும். ஆனால், தரையில் விழுந்த வேகத்தில் மேலே என் கைக்கு வரும் விதமாய் எம்பும். எனவே, மற்றவற்றில் கவனம் செலுத்த முடிகிறது". ஒரே நேரம் பலவற்றை செய்யலாம். ஒன்றில் ஏற்படும் பின்னடைவு, மற்றவற்றைப் பாதிக்காமல் பார்த்துக்கொள்வது முக்கியம்.

- ஜே.எஸ்.இரத்தினராஜா -

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அழைப்பு

எம் தாய்நாட்டில் இவ்வருடம் ஏப்ரல் 21ல் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் மீண்டும் தொடராமல் இருக்க மரியன்னையின் பிறப்புப் பெருவிழா (செப் 8 2019) அன்று மரியன்னையின் மாசற்ற திருஇருதயத்துக்கு எமது நாட்டை அர்ப்பணித்து நாட்டின் சமாதானத்திற்கான செபத்தை பக்தியுடன் செபிக்க சகல மறைமாநில தலத் திருச்சபைகளையும் அழைக்கின்றோம்.

எமது மறைமாநிலத்தில் ஆயித்தியமலை சதாசகாய அன்னையின் திருத்தலத்தில் செப். 8 அன்று ஆயர் தலைமையில் இடம் பெறும் பெருவிழாத் திருப்பலியில் இந்நிகழ்வு இடம்பெறும் என்பதையும், பெருவிழாவில் பங்குபெற இயலாத பங்குத் தலங்கள், தங்கள் பங்குத் தலங்களில் இதனைச் செயற்படுத்து மாறும் வேண்டி நிற்கின்றோம்.



**மாணவர் பக்கம் தொடர்ச்சி....**

மாக்குதல், மன்றாட்டு மாலை போன்றவைகளும், உரோமைய கலாச்சாரத்தின் தாக்கங்களான, திருப்பலி ஆன்கள், விளக்குகள், தூபம் பயன்படுத்தல், திருவழிபாட்டு மன்றாட்டுகள், இலத்தீன் மொழி, கிரகொரியன் இசை, குறிப்பிட்ட சில திருமண, மரணச் சடங்கு முறைகள் போன்றவைகளும் காணப்படுகின்றன. இருப்பினும் திருப்பலியின் இரு முக்கிய பகுதிகளான இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு என்பன யூத மரபிலிருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டவையாகும். இவ்வாறு தொடக்க காலத்தில் கிறிஸ்தவ திருவழிபாடுகளில் ஆரம்பமாகிய மாற்றங்கள் இன்றும் நம் வழிபாட்டில் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. ■




# போட்டி முடிவுகள்!



**திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் - 193**
பங்கு பற்றியோர் 15 பேர், இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதியவர்கள் 8 பேர்.

## திருவிவிலியம் கற்போம் - 193 விடைகள்

அறிவும் அழகும், கத்தரிப்பவர்கள், மூட்டைகளில், சொந்தமானவர்களில், வாழ்த்தப்பெறுவாராக, கல்லைப்போல், அக்கிலா, கை வைக்காதபடி, வீரன், மூடத்தனமாய்

## அறிவை வளர்ப்போம் - 193 விடைகள்

1. பால்டிக் கடல்
2. 190 டிகிரி
3. இந்தியா
4. நரம்பு கோளாறுகளுக்கு
5. வாசனை
5. வியங்கோள் வினைமுற்று

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

**போட்டியின் இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி I ம் பிரிவில் 300/= பரிசு பெறுபவர்:**

* **D. அபினி,**
இல. 72/7, 3ம் குறுக்குத் தெரு,
மட்டக்களப்பு.

* **ஜெ. சாமிலி,**
53/22, சித்தி விநாயகர் குறுக்கு வீதி,
புன்னைச்சோலை,
மட்டக்களப்பு.

* **கீத் செலர்,**
இல. K 09, பனிச்சையடி,
மட்டக்களப்பு.

* **J. ஜெயச்சந்திரன்,**
11/03, பாரதி லேன்,
மட்டக்களப்பு.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 145 முடிவுகள்

**1ம் பரிசு - 400/=**

* **J. மேஷாக் மிதுஷாந்,**
385/1, திருமலை தெரு,
மட்டக்களப்பு.

**2ம் பரிசு - 300/=**

* **வி. கிறிஸ்றியா,**
சந்தை வீதி,
செங்கலடி - 02.

**3ம் பரிசு - 200/=**

* **M. லூவிஸ்,**
C/O, சாதனா,
பிரதான வீதி, தம்பிலுவில் - 01.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)



# இராயப்பு யோசப் ஆண்டகைக்குப் பிறகு...

● குடிமகன்

இலங்கையில் வாழும் தமிழ்க் கத்தோலிக்கர்கள் தீர்க்கமான தீர்மானம் எடுக்கும் காலகட்டத்திற்குள் வந்துள்ளார்கள். குறிப்பாக வடக்கு கிழக்கில் உள்ள கத்தோலிக்கர்கள்.

இலங்கையின் அரசியலில் பல்வேறு வகையான அமுக்கக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக, பௌத்த பீடங்கள் அரசியல் பயணங்களை நெறிப்படுத்தும் சக்தியாக, பெரும் அமுக்கக் குழுக்களாக செயலாற்றுகின்றன. இவர்கள் பெரும்பான்மை சமூகத்தை அடிப்படையாகக் கொண்டே அச் சமூகத்தின் நலன்களுக்காக பேசுகின்றார்கள். இதில் சிறுபான்மைச் சமூகங்கள் அகப்பட்டு, அடிபட்டு போய்விடுகின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர்தான் இலங்கையின் கத்தோலிக்க உயர் பீடம் சில காத்திரமான கருத்துகளை வெளியிடத் தொடங்கியுள்ளது. கிறிஸ்தவர்கள் பலியெடுக்கப்பட்டது தொடர்பாக இதுவரையிலும் உண்மைக் குற்றவாளிகள் பிடிக்கப்படவில்லை என்பதே இதன் வெளிப்பாடு. அண்மையில் மடு ஆவணி திருவிழா மறையுரையிலும் இதுபற்றி வெளிப்படுத்தப்பட்டிருந்தமை கண்கூடு. அடிக்கடி பத்திரிகையாளர் சந்திப்புகளை உயர்பீடம் நடத்தி வருகின்றது. இச் செயற்பாடு சர்வதேச ரீதியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க உண்மைதான்; என்றாலும் இது சற்று அதிகமாய்ப் போய்விட்டது என்றும் விமர்சிக்கப்படுகின்றது.

இது இவ்விதம் இருக்க, இத்தாக்குதல்கள் வடக்கு, கிழக்கு பகுதியில் மட்டும் நடந்திருந்தால், இன்றுள்ள ஆர்ப்பரிப்புகள், ஆரவாரங்கள், உடைச் சந்திப்புகள் இடம்பெற்றிருக்குமோ என்பதும் ஐய வினாவாக விமர்சகர்களால் காட்டப்படுகின்றது.

இராயப்பு யோசப் ஆண்டகைக்குப் பிறகு தமிழர்களின் பிரச்சினைகள் வெளிக்கொணரப்படுவது குறைந்து விட்டது போன்று ஒரு விம்பம் தென்படுகின்றது. மட்டக்களப்பு, திருகோணமலை ஆயர்கள் சில சில வெளிப்பாடுகளைத் தமது ஊடக அறிக்கைகள், சுற்றுமடல்கள் மூலம் கொண்டுவரத் தொடங்கிவிட்டனர். அத்துடன் சிற்சில செயற்பாடுகளில் துணிவுடன் ஈடுபடுகின்றனர்.

இலங்கையின் ஜனாதிபதியை தீர்மானிப்பதில் கிறிஸ்தவ வாக்காளர்களின் கணிசமான பங்கு உண்டு என்பதனை கத்தோலிக்க உயர் பீடம் அறிந்துதான் காய் நகர்த்துகின்றது. அதுபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பாராளுமன்ற, ஒரு மாகாணசபை உறுப்பினராவது



ஒட்டு மொத்த கிறிஸ்தவ வாக்குகளைக் கொண்டு தீர்மானிக் கப்படும் வாய்ப்புண்டு. இவ்வாறே திருமலை மாவட்டத்திலும் காணப்படலாம். இதனைச் சாட்டாக வைத்துக்கொண்டு, தம்மைச் சமூக சேவகர்களாக அடையாளப்படுத்தும் ஒரு சில கத்தோலிக்கர்கள் மறைமாவட்ட உயர் பீடங்களில் சிபார்சுக்காக செல்லும் நிலை காணப் படலாம்: காணப்பட்டதும் உண்டு. எனவே, உயர்பீடங்கள் சரியான நபர்களை அடையாளம் காணும் பொறிமுறையொன்றை இனம் கண்டு, அதனைப் பயன்படுத்தி சரியான ஒருவரை மட்டும் சிபார்சு செய்யவேண்டும்.

மெல்ல மெல்ல கத்தோலிக்கத் திருச்சபையும் மாவட்ட மட்ட அரசியலில் அமுக்கக் குழுவாக செயற்பட வேண்டும். நேரடி அரசியல் தேவை யில்லை. ஆனால் மத வழிகாட்டிகளாக செயற்படு வதுபோல் அரசியல் வழிகாட்டிகளாக செயற்படும் கடப்பாடு திருச்சபைக்கு உண்டு.

திருச்சபையில் உள்ளூர் தலைப்பீடங்களின் வழிகாட்டல்களை கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி ஏனைய மதத்தவர்களும் அக்கறையுடன் எதிர்பார்க் கின்றனர்; பொருத்தமானவற்றை பின்பற்றவும் தயாராக இருக்கின்றனர்.

இல்லாவிடில் முள்ளிவாய்க்கால் பற்றி வாய் திறக்காமை, நவாலி தேவாலய வான்வெளித் தாக்குதல் இரண்டு தசாப்தங்களுக்கு முன் நடைபெற்றபோது மௌனித்து மறைத்தது போன்ற சம்பங்கள் இப்போதும் எதிரான விமர்சனங்களுக்குள்ளாவதுபோல் நமது மறை மாவட்டங்களும் எதிரான விமர்சனங்குள்ளாக கூடாது என்பது எமது அவா! ■

''மூடர்கள் எதைப் பார்த்தாலும் அதில்
உள்ள குற்றத்தையே நாடுவார்கள்; காகம்
இனிய கனிகள் இருக்கும் தோட்டத்தில்
பிரவேசித்தாலும் வேப்பம் கனியையே
இச்சிக்கும்.'' – நீதி கௌமுகி

''தன்னை எரித்துக்கொண்டு
சன்னதியில் ஒளி பரப்பும் எண்ணெய்
விளக்கைப் பார்த்தேன். ஆயுள்
உள்ளவரை ஆண்டவனின் சேவை
செய்யும் அருங்குணம் தேவை
என்றுணர்ந்தேன்''
– மகாகவி பாரதியார்







**இதுதானே நமக்கும் வேண்டும் ......**


இளைஞர்கள் அந்தப் படகில் ஏறினார்கள். படகோட்டி மண்டியிட்டு வழிபாடு செய்வதைக்கண்டு சிரித்தார்கள். "காற்றில்லை, கடல் அமைதியாயிருக்கிறது" என்று கேலி செய்தார்கள். படகோட்டி வந்து படகை இயக்கினார். சிறிது தூரம் போனதும் காற்று பலமாக வீசியது. அனைவரும் பிரார்த்திக்கத் தொடங்கினார்கள். படகோட்டி எச்சரிக்கையாய் இயக்கி படகைக் கரை சேர்த்தார். "நீங்கள் எங்கள் பிரார்த்தனையில் பங்கெடுக்கவில்லையே?" வியப்புடன் கேட்டவர்களுக்குச் சொன்னார், "கடல் அமைதியாய் இருக்கையில் நான் பிரார்த்திக்கின்றேன். கொந்தளிக்கும்போது படகைக் கையாள்கிறேன்" இதுதானே நமக்கும் வேண்டும்.

– ஜே.பி.இரத்தினராஜா –




குறும்பா 37 **எல்லை**

| | |
|---|---|
| பாடுபட்டு உழைப்பவர்க்குத் | தொல்லை |
| பசியற்று வாழவழி | இல்லை! |
| கா:வெட்டிக் கழனிசெய்து | |
| காலமெலாம் கடல்மீதில் | |
| ஓடித்தினம் உழன்றும் வறுமைதான் | எல்லை. |




# சுற்றுச் சூழலியம்

## ஓர் கிறீத்தவப் பார்வை

அருட்சகோதரர் பீ.வினோராச் ,
கிளரீசியன் சபை.

**அறிமுகம்:**

தாயகத்தின் கோடையையும் தமிழகத்தின் சுட்டெரிக்கும் கத்தரி வெய்யிலையும் கூட நான் கடந்து வந்திருக்கிறேன். கோடையும் சோழகமும் சோடியாக வருவதாலோ தெரியவில்லை, வெப்பம் ஒரு பொருட்டு என நான் கருதியதில்லை. ஆனால் ஐரோப்பாவில் இது எனக்கு முதல் கோடை. இங்கு குளிரை விட வெயிலெனும் போது தான் வெளியிற் செல்ல தயங்கும் ஒரு புது உணர்வு. போர்களத்தில் பிறந்து அகதிமுகாம்களில் வளர்ந்து ஆயுதங்களின் கோர ஒலிகளையும் அழுகுரல்களையுமே ஆங்காங்கே தாலாட்டாய்க் கேட்டு வளர்ந்த ஒரு அனுபவமே எம் பலரின் உள்ளக் கிடக்கைகளில் புதைந்து கிடக்கின்றது. நடந்து வந்த பாதைகளை பலரில் ஒருவனாக நானும் திரும்பிப் பார்க்கும்போது பல வகையான எண்ணங்கள் மலர்ந்து மறைகின்றன. இவை எனக்குள் உற்பத்தி செய்யும் உணர்வலைகள் ஏராளம். இவை இவ்வாறு இருக்க, புதியதோர் நிலப்பரப்பில் பிறிதோர் அரசியல் கலாச்சார பெருவெளியில் நான் காணும் நிதர்சனங்கள் பல வேளைகளில் ஆச்சரியமாகவும் விநோதமாகவும் இருப்பதுண்டு. அவை பல்வேறு வகையானதாக இருப்பினும் ஒரு விடயத்தை மட்டும் சற்று ஆழமாகவும் அழுத்தமாகவும் ஆய்வு செய்ய விரும்புகின்றேன். சில வருடங்களுக்கு முன்பு நாங்கள் பாடப் புத்தகத்தில் பரீட்சைக்காய் மட்டும் படித்த சுற்றுச் சூழலியம் இங்கு அரசியல் அதிகாரத்தை தீர்மானிக்கும் தேர்தல்களில் பேசுபொருளாக மாறி இருப்பதும், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இக்கருத்தியலை முன்னிறுத்தும் அரசியல் கட்சிகள் அண்மைக் காலங்களில் பெறும் மக்கள் ஆதரவு போன்ற விடயங்கள் எனக்குள் பல சிந்தனைகளை பிரசவிக்கின்றன.

**மாறிவரும் மனித வாழ்வியல்:**

இப்பூமிப் பந்தின் வரலாற்றினை சற்றே இரைமீட்டி பார்த்தால், என்றுமே மனித குலம் தன் வாழ்வுக்கான வளர்ச்சிக்கான தேடலில் முழு முனைப்போடு ஈடுபட்டிருப்பது எமக்குத் தெளிவாகின்றது. சாயல்கள் மாறினாலும் இத்தேடல் இன்றும் உயிரோட்டமுடன் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. இந்த 21 ஆம் நூற்றாண்டில் இடம்பெறும் தேடலின் இலக்காய் இயற்கை அமைந்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாய் இயற்கையுடன் இரண்டறக் கலந்திருந்த மனித வாழ்வியலானது அண்மைக் காங்களில் வளர்ச்சி, நாகரீகம், முன்னேற்றம் என்ற தேவையான ஆனால் மனிதனை மட்டும் முன்னிறுத்திய ஏனைய படைப்புக்கள் மீதான ஓர் ஆதிக்க மனோநிலை எம்மில் மேலோங்கியிருக்கிறது. இதன் காரணமாய் இயற்கையுடன் நாம் கொண்டிருந்த உறவு முறிவடைந்திருக்கின்றது என்றுதான் கூறவேண்டும். இன்று பல நாடுகளில் மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ள ஒன்றுக்கொன்று முரணான காலநிலை மாற்றங்களும் பேரழிவுகளை ஏற்படுத்தும் இயற்கை

அனர்த்தங்களும் இயற்கை அனர்த்தங்களும் இவ் உறவு முறிவின் வெளிப்பாடுகளே. வெயிலில் குளிரும், குளிரில் வெப்பமும் பணம் படைத்த வர்களுக்கு சாத்தியமாகின்றது. ஆனால் ஒருவேளை உணவிற்கும், ஒரு குடம் குடி நீருக்கும், வெறுமனே அடிப்படைத் தேவைக ளுக்கும் தினம் தினம் போராட வேண்டிய நிலையில் உள்ள உலகின் பெரும்பான்மை குடி மக்களாம் ஏழைகளின் நிலையென்ன? எத்தனை உயிர்களையும் பலிகொடுத்து தத்தம் அரசியல் அதிகார இருக்கைகளைத் தக்கவைக்கத் தயங்காத மக்கள் தலைவர்கள் மலிந்து விட்ட இத்தரணியில் இயற்கைத் தாயின் அழுகுரல் கேட்க யார் தயார்? இப்படிக் கேள்விகளை இன்று பலரும் எழுப்புகின்றார்கள் என்பதும் உண்மை தான். நிச்சயமாக இவர்களின் முயற்சிகள் பாராட்டப் பட வேண்டியதுதான். ஆனால் இவற்றை வெறுமனே அரசியல், பொருளாதார, அறிவுசார் ஒழுக்க நெறிகளுக்குள் மட்டுப்படுத்துவது எந்த அளவுக்கு ஆரோக்கியமானது என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். ஏனெனில் கடவுள் தொடங்கி மனிதன் மற்றும் ஏனைய உயிருள்ள உயிரற்ற அத்தனை விடயங்களையும் வெறுமனே இலாபம் ஈட்டக்கூடிய விற்பனைப் பொருளாய் குறுக்கி விட்ட வர்த்தக நுகர்வுக் கலாச்சாரத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு கூட சுய இலாபம் தேடும் கட்டமைக்கப்பட்ட விம்பமாய் மாறாது என்பதற்க்கு எந்த உத்தரவாதமும் இல்லை .

**சூழலியமும் கிறீத்தவர்களும் :**

இவ்விடத்தில்தான் உலகிற்க்கு ஒளியாய் வாழ அழைப்புப்பெற்ற கிறிஸ்தவர்களாகிய எங்கள் கடமைகள் என்ன என்ற தேடல் தொடங்க வேண்டும் (மத் 5:14-16). கிறிஸ்தவர்களாகிய எமக்கு இது தட்டிக் கழிக்க முடியாத கடமை. நீண்ட நெடிய நம் பாரம்பரியத்தின் நிகழ்கால ஆன்மீகக் கடமை. ஏனெனில் எம்மைப் பொறுத்த மட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது எம்மையும் நாம் தாங்கி வாழும் சூழலையும் பற்றியது மட்டுமல்ல. மாறாக, இவை அனைத்திற்கும் அடிநாதமாய் அமைந்த பேர். அன்பு கொண்டு எம்மைத் தாங் கும் இறைவனையும் பற்றியது. அவருக்கும், எமக்கும், நாம் காணும் படைப்பனைத்திற்கும் இடையிலான ஆழமான உறவைப் பற்றி யது. பரந்து விரிந்த இப்பிரபஞ்சத்தின் இற்றை வரைக்குமான வரலாற்றை ஒரு நூலாய்த் தொகுத் தால் அதன் இறுதி 2, 3 பக்கங்களில்தான் மனித வரலாறு தொடங்குகின்றது என்கிறார்கள் அறிவியலாளர்கள். இதனையொத்த படைப்பின் ஒழுங்கு முறையைத்தான் வவிலியமும் எமக்கு விபரிக்கின்றது (தொ.நூ1:1-31). இயற்கையின் அனைத்து கூறுகளையும் அதனதன் தனிப் பண்புக ளோடு படைத்த பின் இறைவன் மனிதனை தன் சாயலாக உருவாக்கினார் (தொ.நூ1;26). ஆகவே நாம் படைப்பில் தனித்துவமானவர்கள் தான்; சிறப்பு மிக்கவர்கள்தான்; இறைவனின் இதயத்திற்கு நெருக்கமானவர்கள்தான். இருப்பி னும் இப்பண்புகளை நாம் ஏனைய படைப்பு களின்மீது செலுத்தும் அளவு மீறிய ஆதிக்கத்தின் ஊடாகவும், அவற்றைச் சிதைப்பதனூடாகவும் வெளிப்படுத்துவது நாம் செய்து வருகின்ற மிகப் பெரும் வரலாற்றுப் பிழை. ஏனெனில் இறைவன், படைப்பு இதில் நாம் என்ற ஒழுங்கு முறை என்பது மாற்ற முடியாத ஒரு புனிதமான உறவுமுறை. கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி இல: 291. 'படைத்தவரைப் பிரிந்து படைப்பாகிய நாம் நெடுநாள் இயங்கமுடியாது' (யோவான் 15:4-6,க.திம:இல338). எனவே தான் திருத்தந்தை பிரான்சிஸ் 2015 ஆம் ஆண்டில் அனைத்துலக திருச்சபைக்கு எழுதிய **இறைவா உமக்கு புகழ்** என்ற சுற்று மடலில் இயற்கையோடு ஒன்றிணைந்த ஒரு வாழ்க்கை முறையின் தேவையினை வலியுறுத்துகின்றார் (இல 228). சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது வாழ்வை நேசிக்கும் ஒவொரு வருவரின் கடமையாக இருந்தாலும், கிறிஸ்த வர்களாகிய எமக்கு இறைவனே ஒப்படைத்த பாரிய பொறுப்பு. இதனைத் தொடர்ந்து ஆற்று வதனூடாக மட்டும்தான் நாம் படைப்புக்கள் அனைத்திலிருந்தும் தனித்துவமானவர்கள் என்ற அடையாளத்தை வெளிப்படுத்த முடியும். எமது விவிலியப் பண்பாட்டிலும் சரி, நீண்டகால வரலாறு கொண்ட கீழைத்தேய மற்றும் மேலைத்தேய துறவற வாழ்விலும் சரி பல்வேறுபட்ட மனிதர்கள் இறைவனைக் காணவும் ஆழமான ஆன்மிக அனுபவம் பெறவும் இயற்கையைத்தான் நெருங் கிச் சென்றார்கள்.

– மிகுதி அடுத்த இதழில் .....



வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் : திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அண்ட் பேணிச்சரஸ், 142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 18

1) "உலகின் அதிபதி கடவுள் ஒருவரே: அவர் பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிப்பேன்" எனக் கூறியவர்? ..............................................................

2) ஒரு சில விற்பனையாளர்கள் மக்களை கவர்ந்திட நாட்டுப் பழக்கங்களில் எவ்வாறான மருந்தை உள்ளே செலுத்துகிறார்கள்? ..............................................................
..............................................................

3) நாம் மனம்மாறி கடவுளுக்கு அண்மையில் வர அன்னை மரியாள் கோலியாத்துக்கு எதிரான 5 கருவிகளை தந்தார். அவை எவை?
..............................................................
..............................................................
..............................................................

4) கேன்சரை (Cancer) வரவிடாமல் தடுப்பதற்கும், வந்தவர்களுக்கு அதை குணப்படுத்து வதற்கும் முக்கிய பங்குடைய காரணி எது? விளக்குக: ..............................................................
..............................................................
..............................................................
..............................................................

5) வில்லிப்புத்தூர் ஆழ்வார் எங்கே பிறந்தார்? இவர் தந்தை பெயர் என்ன?
..............................................................
..............................................................

6) திருச்சபையைக் குறிக்கும் மூல கிரேக்கச் சொல் எது? அதன் பொருள் யாது?
..............................................................

7) ஐப்பசி 17ம் நாள் எத்தினமாக நினைவுகூரப்படுகிறது? இந்நாளை ஆரம்பித்து வைத்த வர் யார்? ..............................................................
..............................................................

8) மரியாவின் ஆன்மீகத்தில் அவரது இறையனுபவத்தின் மூன்று முக்கிய நிலைகள் எவை? ..............................................................
..............................................................

9) "உயிர் பிரியதான் வாழ்வு. ஒரு நாள் பிரியும். சுற்றம், நட்பு, செல்வம் எல்லாமே பிரிந்து விடும்" இக்கூற்று எப்புத்தகத்தில் அமைந்துள்ளது? ..............................................................

10) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது முதலாவது சமூகப் படிப்பினை சுற்றுமடலை எப் பெயரில் வெளியிட்டார்? ..............................................................

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................
..............................................................

பங்கு / தொ.பே.இல : ..............................................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..............................................................

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 18**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 31.09.2019




சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி

31.09.2019

## சரியான விடைகளை மாற்கு நற்செய்தியிலிருந்து தெரிந்து எழுதவும்

1. பரிசேயரைச் சார்ந்த மறைநூல் அறிஞர் சீடர்களிடம், "இவர் வரிதண்டுபவரோடும், பாவிகளோடும் சேர்ந்து விருந்து உண்டதேன்?" என்று கேட்க, இயேசு யாருக்கு மருத்துவர் தேவை எனக் கூறினார்?

   ........................................................................................................................

2. இயேசு பன்னிரெண்டு சீடர்களுக்கும் கொடுத்த 3 பணிகள் எவை?

   ........................................................................................................................

   ........................................................................................................................

   ........................................................................................................................

3. "நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்" என்ற கருப் பொருளைக் கொண்ட உவமை எது?

   ........................................................................................................................

4. "தலித்தாகூம்" என்பதன் பொருள்:

   ........................................................................................................................

5. இம் மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர் இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலைவில் இருக்கிறது." இவ்வசனம் காணப்படும் திருவிவிலியப் பகுதி: ..........................................................................

6. பார்வையற்ற பாத்திமேயு யாருடைய மகன்?

   ........................................................................................................................

7. 'தெனாரியம்" என்பது என்ன? ..........................................................................

   ........................................................................................................................

8. தெனாரியத்தில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும், எழுத்தும் யாருடையவை?

   ........................................................................................................................


9. இயேசுவின் தலையில் பெண் ஊற்றிய தைலம் யாது?

   ........................................................................................................................

10. இயேசு உயிர்த்தெழுந்த பின்பு அவர் முதலில் யாருக்குத் தோன்றினார்?

   ........................................................................................................................

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)




# 'லீசிங்'கால் விளைந்த வில்லங்கங்கள்!

05 செ. அன்புராசா அடிகள்
அமைதித் தென்றல், முல்லைத்தீவு,
அதிர்வுகள் – 02


'லீசிங்" கொடுக்கல் வாங்கல்களால் பல்வேறு பட்ட வேதனைகளும், துன்பங்களும் சமுதாயத்தில் இன்று பரவிக் கிடப்பது கண்கூடு.

பெற்றுக்கொண்ட முதலையும், முதலுக்குரிய வட்டியையும், வட்டியினுடைய குட்டியையும் கொடுக்க முடியாத சூழலில் வாழுகிறவர்கள் ஊரைவிட்டு வேறு இடங்களுக்குச் சென்று மறைந்து வாழுதல், வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடுதல், வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து தவறான முடிவெடுத்தல் போன்றவற்றால் இருக்கிற துன்பங்களோடு இன்னும் அதிக துன்பங்களைத் தாங்களே தங்களுக்குத் தேடிக்கொள்வதோடு, தங்களை நம்பி வாழும் குடும்பத்தவர்களுக்கும் உறவுகளுக்கும் தேடிக்கொடுக்கிறார்கள் என்பது நடைமுறையில் காண்கிற ஒரு கசப்பான விடயமாக இருக்கிறது.

மேலும், குடும்பங்களில் பல பிளவுகளும், விரிசல்களும் இக்கடன் தொல்லைகளால் ஏற்படு கின்றன. இழந்து போனதை மீட்க அல்லது வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப சட்ட விரோதமாக, சமூக வாழ்வுக்கு ஒவ்வாத, நெறி பிறழ்வான முறைகளில் முயற்சி செய்யத் தலைப்படுகிறார்கள்.

இது, பல குடும்பங்களின் நெறி பிறழ்வுக்கு வழிவகுத்திருக்கிறது. செய்துவந்த தொழிலையே தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கும், வேறு முயற்சிகளில் ஈடுபட முடியாத மனோநிலக்கும் இவ்வாறானவர்கள் தள்ளப்படுகிறார்கள்.

இந்நுண்நிதி நிறுவனங்களின் "உச்ச இலக்கு" பணம் கறப்பதாகும். இதையே நோக்காகக் கொண்டிருப்பதால், பணத்தைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழலில், எவ்வித விதி விலக்கும் இல்லாமல் ~ கடன் பெற்றவரின் நிகழ்காலத்துச் சூழ்நிலைகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாமல் கொடுத்ததைப் பறித்துக்கொண்டு செல்கிறார்கள். எனவே, நுண்நிதி நிறுவனங்களில் கடன்கள், லீசிங்கள் பெறுவதைத் தவிர்ப்பதொன்றுதான் சாதாரண பொதுமக்கள் தங்கள் இருப்பை இழந்த போகாதிருக்கத் துணை செய்வதான மார்க்கமாகும். ■



### வாழ்வின் இரகசியம் ....

- கொடுப்பதே கிறிஸ்தவ வாழ்வின் இரகசியம்.
- உங்கள் கரங்களை கொடுப்பதற்கும், சேவையாற்றுவதற்கும் பயன்படுத்துங்கள்.
- கொடுங்கள் .... இறைவனும் உங்களுக்கு தன்னுடைய கரங்களை விரித்துக் கொடுப்பார்.

### மன்னிக்கின்ற மனிதனாக வாழ ...



- மன்னிப்பதிலிருந்தே நாம் மீண்டும் வாழ்வை தொடங்கு கின்றோம்.
- கடவுளே உன்னை மன்னிக்கிறார் என்றால் ஏன் உன்னால் உன் சகோதரனை மன்னிக்க முடியாது.
- மன்னித்துப் பார் நீயும் சீடனாக வாய்ப்புண்டு..



# அவனும் உருப்படாமத்தான் போவான் ...

## நோ... வொறீஸ்... பீ ஸ்ரோங்...

நான் கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்தவன்; படிப்பதற்கு மற்றவர்களைப் போல எனக்கு வசதி கிடையாது; என்னுடைய தகப்பன் என்ன பெரிய படிப்பு படித்தவரா; என்னுடைய பரம்பரையில் யாராவது படித்து சமுதாயத்தில் முன்னேறியிருக்கிறார்களா? இவர்கள் எல்லாம் ஏனோ தானோ என்று வாழ்ந்தவர்கள்தானே; படிக்காவிட்டாலும், முயற்சி எடுக்காவிட்டாலும் அவர்கள் சந்தோசமாகத்தானே வாழுகிறார்கள். அவர்களைப்போல நானும் வாழ்ந்துவிட்டு போகலாமே என்று நினைத்து நினைத்து எமது எண்ணங்களை முடக்கி, சுற்றுமதில் அமைத்து வாழ்வை அழித்துவிடுகின்றோம்.


பார்ப்பவர்கள், உறவினர்கள், ஏன் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் கூட அடிக்கடி சொல்வது, "அவன் எங்க படிக்கப்போறான், அவன் எங்க முன்னேறப் போறான்: உருப்பட்டு வாறது என்றா கடும் கஷ்டம்தான். அவன்ட குடும்பத்துல யாருதான் படித்தவனுகள் இருக்கானுகள்... இவனும் உருப்படாமத்தான் போவான் என்று முற்றுப்புள்ளி வைப்பார்கள். அவ்வளவுதான் அவனின் வாழ்க்கை .... என்ன செய்வது .....

நானும் நீயும் இருக்கும் இடம் வசதி குறைவாக இருக்கலாம். ஆனால், சமுதாயத்தில் இருக்கின்ற மற்ற பக்கத்தை நான் பார்க்க ஆசைப்பட வேண்டும். பெற்றவர்கள் பட்ட கஷ்டத்தை நினைத்தாலே உயர்ந்து செல்ல வாய்ப்புகள் அதிகரிக்கும். என் அப்பா ஒரு கூலித் தொழிலாளி. அவர் படும் வேதனை, வெயிலில் சுடுபட்ட அவரது சுருங்கிய தோற்றம், முதலாளிகளின் முன் அவர் கைகட்டி, தலைகுனிந்து நிற்கும் நிலை, நான் உயர அவர் பட்டினியாயிருந்த தருணங்கள், கடன்பட புறப்படும் கால்கள், கண்ணீர் வடித்த சந்தர்ப்பங்கள் இதையெல்லாம் நினைத்து நினைத்து முதலடியை எடுத்து வைத்தால், சந்தோஷப்படுவது உன்னைச் சுமக்கும் உன் தகப்பன்தான்.

தகப்பனுக்குப் பெருமை தேடிக் கொடுத்தவர்கள் அதிகம். மொழிகளைத் தாண்டி உலக மக்களையே சிரிப்பில் ஆழ்த்தும் சார்லி சாப்ளினின் தந்தை ஒரு வீட்டு வேலைக்காரர். ஆட்சியாளரான ஹிட்லர், ஆபிரகாம் லிங்கன் இவர்களின் தந்தையர்களும் கூலித் தொழிலாளர்கள். அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் அப்பா சாதாரண வியாபாரி. தோமஸ் அல்வா எடிசனின் தந்தையோ படகு செய்து விற்ற ஒரு ஏழை. வில்லியம் ஷேக்ஸ்பியர் எனும் இலக்கிய மேதையின் தகப்பன் லயத்தில் குதிரை பராமரித்தவர்.

இப்படி சாதாரண ஏழைகளாக அன்றாட உணவுக்கு கஷ்டப்பட்டு பிள்ளைகளை வளர்த்த தந்தையர்களுக்கு பிள்ளைகள் கஷ்டத்தை உணர்ந்து பரிசை கொடுத்தார்கள்.
எனவே, நமக்கென்று பாதையை அமைப்போம்: கஷ்டங்களை

.........


தூய மரியாள்
பேராலய
திருவிழா நிகழ்வின்
நிழல்கள் ....